## படை அணிவகுப்புகளுடன் தேசிய சுதந்திர தின விழா கோலாகலம்

எதிர்க்கட்சியினர் புறக்கணிப்பு



02 பக்கம்


# தமிழன்

THAMILAN தමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 447 பிலவ வருடம், தை மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை

(05.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 03, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30




# நாட்டுக்காக தியாகங்களை செய்க!

## சுதந்திர தின உரையில் நாட்டு மக்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

- ★ பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டுள்ளோம்.
- ★ தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவையும் நீண்டகால பிரச்சினைகள் அல்ல.
- ★ தத்தமது பொறுப்பை உரியவாறு நிறைவேற்றுவதன் மூலம் நாம் அனைவரும் நாட்டின் சார்பாக எமது உச்சகட்டப் பங்களிப்பை வழங்கவேண்டும்.
- ★ உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராக தவறான அபிப்பிராயங்களை மக்களிடம் கொண்டுசெல்லும் தரப்பினர் பற்றி மக்கள் கவனமாக இருத்தல்வேண்டும்.
- ★ வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் எல்லோரையும் பிறந்த நாட்டில் முதலீடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

03 பக்கம்

## ரயிலில் இருந்து விழுந்த காதலி; காப்பாற்றக் குதித்த காதலன்!

**செல்பி எடுக்க முயன்றபோது விபரீதம்**

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் பிரான்ஸ் நாட்டு இளம் ஜோடி ஒன்று பயணித்த நிலையில், குறித்த யுவதி திடீரென ரயிலில் இருந்து தவறி விழுந்துள்ளார்.



இது ஓஹிய மற்றும் இந்தல்கஸ் ஹின்ன ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 02 பக்கம்

## வீதியிலிருந்து போராட நீதிமன்றம் தடை; கடலில் இறங்கிப் போராடிய மீனவர்கள்!



யாழ். நிருபர்

வடமராட்சி மீனவர்கள் தமது போராட்ட முறையை மாற்றி கடலில் இறங்கிப் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் இந்திய மீனவர்களின் படகு மோதி உயிரிழந்த சம்பவத்திற்கு நீதி கோரியும் ஐந்தாவது நாளாக நேற்றைய தினமும் வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர். 02 பக்கம்

## இலங்கையில் சித்திரவதை, வன்முறை குறித்த அறிக்கை தீவிர கவனத்தில்



இலங்கையில் இடம்பெறும் சித்திர வதைகள் பாலியல் வன்முறைகள் குறித்து சர்வதேச உண்மை, நீதிக்கான திட்டம் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை தீவிரமாக எடுத்துள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து கடும் கரிசனைகளை வெளியிட்டுள்ளோம் எனவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டோனியா அன்டோனியாசி எழுப்பிய கேள்விக்கு வழங்கியுள்ள எழுத்துமூல பதிலில் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அமன்டா மில்லிங் இதனைத் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## உள்நாட்டு பொறிமுறையில் ஒரு தீர்வும் கிடைக்காது

**சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு**



02 பக்கம்

## சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் ஆர்ப்பாட்டம்




08 பக்கம்

## மக்களுடன் ஒன்றிணைந்து ஜனநாயக போராட்டத்தை வேகப்படுத்துவோம்

**ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார விசேட அறிக்கை**



அரசாங்கம் நாட்டுக்கு ஈட்டித்தந்துள்ள மரண பயம், நோய் பயம் போன்ற அச்ச நிலைமையை இல்லாமல் செய்து உண்மையான சுதந்திரத்தை மீண்டும் மக்களின் வாழ்க்கையுடன் இணைப்பதற்காக மக்களுடன் ஒன்றிணைந்து எமது ஜனநாயகப் போராட்டத்தை வேகமாக நடைமுறைப்படுத்துவோம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



அப்ப எல்லோரும் தியாகிகள் தான் இனி...

### உஷ்



மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் மகன் கைது செய்யப்பட்டிருப்பதால் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை மீண்டும் தருமாறு அருந்திக்க பெர்னாண்டோ அரச தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தாராம்.

ஆனால் அதனை மீண்டும் வழங்காமல் விசாரணைகள் முடிந்தபின்னர் பார்ப்போமென அரச மேலிடம் கைவிரித்துவிட்டதாம்.

# இந்தியாவுக்கு பயணமாகிறார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்



வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அதன்படி, இன்று 6ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள அமைச்சர், இலங்கையில் ஏற்பட்டுள்ள எரி பொருள் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவுள்ளார்.

மேலும், வடக்கில் ஏற்பட்டுள்ள இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை குறித்தும் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

விஜயம் மேற்கொள்ளவுள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சராக ஜீ.எல்.பீரிஸ் கடந்த 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொறுப் பேற்றதன் பின்னர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடப்படுகின்றது.

## இலங்கையில் சித்திரவதை...

இலங்கைக்கான சமீபத்திய விஜயத்தின்போது, அமைச்சர் தாரிக் அஹமட் இலங்கை தலைவர்களுடன் இந்த விவகாரங்கள் குறித்து இலங்கை தலைவர்களுடன் பலமுறை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரங்களின் முக்கியத்துவம் குறித்து அமைச்சர் பிரிட்டனுக்கான இலங்கை தூதுவருடனும் இலங்கை வெளிவிவகார அமைச் சருடனும் பல தடவை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கைக்கு ஜனவரி 18ஆம் திகதிமுதல் 20ஆம் திகதி வரை மேற்கொண்ட விஜயத்தின் போது ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களை சந்தித்தவேளை, மோசமடைந்துவரும் மனித உரிமை குறித்து அவர் கேள்வி எழுப்பினார் என அமண்டா மில்லிங் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 26ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினை சந்தித்தவேளை, வெளிவிவகார அமைச்சர் இது குறித்து கேள்வி எழுப்பினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினால் ஆணை வழங்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படை யில், இலங்கையில் மனித உரிமைகள் பொறுப் புக்கூறல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் ஆதரவளிப்போம் என பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ரயிலில் இருந்து விழுந்த...

அவர்கள் இருவரும் ரயிலின் நடைமேடையில் பயணித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓடும் ரயிலில் இருந்து திடீரென விழுந்த காதலியை காப்பாற்ற காதலனும் ரயிலில் இருந்து குதித்துள்ளார்.

அப்போது ரயிலில் இருந்த மற்ற பயணிகள் அபாய மணியை ஒலிக்கச் செய்து ரயிலை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த விபத்தில் குறித்த இருவரும் சிறு காயங்களுக்குள்ளான நிலையில், தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புகையிரதத்தில் கதவுக்கு அருகாமையில் செல்பி எடுக்க முற்பட்டபோது பெண் முதலில் கீழே விழுந்துள்ளதாகவும், அவரைக் காப்பாற்றுவதற்காக அவரது கணவன் கீழே குதித்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## வீதியிலிருந்து போராட...

மீனவர்கள் கடந்த 31ஆம் திகதி முதல் பருத்தித்துறை - பொன்னாலை வீதியினை வழிமறித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வரையில் நான்கு நாட்களாக தொடர் போராட் டத்தினை முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளமை, பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு விளைவித்தல், கொரோனா அபாயம் உள்ளிட் டவற்றை சுட்டிக்காட்டி பருத்தித்துறை பொலி ஸார், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் போராட்டத்திற்கு எதிராக தடையுத்தரவை பெற்றிருந்தனர்.

நீதிமன்ற தடையுத்தரவை அடுத்து நேற்றுமுன் தினம் இரவு மீனவர்கள் வீதிமறியல் போராட்டத் தினை கைவிட்டனர்.

இந்நிலையில், இலங்கையின் சுதந்திர தினமான நேற்றைய தினத்தினை கரிநாளாக அனுஷ்டித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த மாதம் 27ஆம் திகதி கடலுக்கு சென்ற வத்திராயன் மீனவர்கள் இருவரும் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் இதுவரை காலமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உயிரிழந்த மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏந்தி, கறுப்புக் கொடிகளுடன் கடலில் இறங்கி மீனவர்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

## மக்களுடன் ஒன்றிணைந்து...

எமது தாய்நாடு எழுபத்து நான்காவது சுதந்திரத் தினத்தை கொண்டாடும் இந்த தருணத்தில் நாம் அனுபவித்த அனைத்து சுதந்திரங்களையும் இல்லாமல் செய்த நாட்டையே அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் எதிர்கொள்ள முடியாத அளவிற்கு வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளன. அந்நிய செலாவணி கையிருப்பு நெருக்கடி காரணமாக எரிபொருள், மருந்துப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது. மின் துண்டிக்கப்படாது என அரசாங்கம் குறிப்பிட்டாலும் நாளாந்தம் மின் விநியோகம் துண்டிக்கப்படுகின்றது. பஸ் மற்றும் ரயில் உட்பட போக்குவரத்துதுறையின் கட்டணங்கள் அனைத்தும் மக்களினால் சுமக்க முடியாதுள்ளது.

தற்போது நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை கட்டுப்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் எடுக்கும் ஆற்றலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து கைநழுவி போயுள்ளது. பொது மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் பொறுப்பேற்காத நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடிமிக்க சந்தர்ப்பத்தில் கோடிக்கணக்கில் செலவிட்டு சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு மாபெரும் உற்சவம் நடத்துவதனாது, மக்கள் தற்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் நாட்டுக்குள்ள சவால்களை புறந்தள்ளும் செயலாகும்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் வான வேடிக்கைக்காக பறக்கும் விமானங்களுக்கு எவ்வளவு எரிபொருள் விரயமாகும். பல நாட்களாக முன்னெடுக்கப்படும் சுதந்திர தின ஒத்திகை நடவடிக்கைகளுக்கான செலவினங்களை நாட்டினால் சுமக்க முடியுமா?. டொலர் இல்லாத காரணத்தினால் எரிபொருள் கப்பல்கள் நடுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் சிக்கிக் கொண்டுள்ளன.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காத அரசாங்கம், மக்கள் அனுபவிக்காத சுதந்திரத்தை கொண்டாடுவதற்கு பில்லியன் கணக்கில் செலவிடுவதனை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

குறைந்த செலவில் சாதாரண உற்சவம் நடத்தி இதற்கான செலவுகளை மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் செலவிட்டிருக்க வேண்டும். நோட்டு அச்சிட்டே அரசாங்கம் நிதி திரட்டுகின்றது. இதன்காரணமாக நாட்டின் பணவீக்கம் 14 சதவீதமாக அதிகரித்துள்ளது. கறுப்புப் பணங்களை பொருளாதாரத்திற்கு உள்வாங்குவது அரசாங்கத்தின் புதிய முயற்சியாகியுள்ளது. கறுப்புப் பணத்தை உபயோகித்தே யுத்தத்திற்கு தேவையான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக நான்கு நாட்களுக்கு முன்பு நிதி அமைச்சர் தெரிவித்த கருத்தின் ஊடாக நாட்டின் அடையாளத்துக்கும் கௌரவத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான கருத்துகள் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி இலங்கையின் எதிர்காலத்திற்கு அபாயத்தை ஏற்படுத்துவதாகும்.

இவ்வாறான சூழலில் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் சாதாரணமான முறையில் மத வழிபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து பொல்வத்த விகாரையில் நாம் சுதந்திரத் தினத்தை கொண்டாடினோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் நாட்டுக்கு ஈட்டித் தந்துள்ள மரண பயம், நோய் பயம் போன்ற அச்ச நிலைமையை இல்லாமல் செய்து உண்மையான சுதந்திரத்தை மீண்டும் மக்களின் வாழ்க்கையுடன் இணைப்பதற்காக மக்களுடன் ஒன்றிணைந்து எமது ஜனநாயகப் போராட்டத்தை வேகமாக நடைமுறைக்கு கொண்டு வருவோம்.

## படை அணிவகுப்புகளுடன்...

**யோ.தர்மராஜ்**

நாட்டின் 74ஆவது சுதந்திர தின தேசிய விழா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நேற்று (04) வெள்ளிக்கிழமை காலை கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நடைபெற்றது.

சவால்களை வெற்றிகொண்டு சிறந்ததொரு எதிர்காலம் - சௌபாக்கியமான தாய் நாடு எனும் தொனிப்பொருளில் காலை 7.30 மணியளவில் சுதந்திர தின நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கொரோனா தொற்று அச்சுறுத்தல் நிலைமைக்கு மத்தியில் இம்முறை சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர தின நிகழ்வில், இராணுவத் தளபதி உள்ளிட்ட அரச தலைவர்களின் வருகையானது காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இதனையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, காலை 8 மணியளவில் சுதந்திர தின நிகழ்விற்கு வருகை தந்தார். இதனைத் தொடர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் பாரியாரும் வருகை தந்தனர்.

காலை 8.15 மணியளவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரின் பாரியாரின் வருகையுடன் பிரதான நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உயிர்நீத்த இராணுவ வீரர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதிக்கு இராணுவத்தின் மரியாதை வழங்கப்பட்டு, 21 துப்பாக்கி குண்டுகளும் தீர்க்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இதேவேளை முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையும், கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இம்முறை சுதந்திர தின விழா அணிவகுப்பில் 6 ஆயிரத்து 500 பேர் பங்கேற்றிருந்தனர். இவர்களில் 3 ஆயிரத்து 463 இராணுவ வீரர்கள், 919 கடற்படை வீரர்கள், 804 விமானப்படை வீரர்கள், 336 பொலிஸ் அதிகாரிகள், 282 பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், 437 சிவில் பாதுகாப்புப் படை அதிகாரிகள் மற்றும் 259 பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, இராணுவ வாகனப் பேரணிகளும் விமானப் படையின் ஆகாய சாகசங்களும் இடம்பெற்றன. இதேவேளை, அந்த நிகழ்வுடன் இணைந்ததாக நண்பகல் 12 மணியளவில் காலிமுகத்திடல் கடற்பகுதியில் கடற்படையினரின் விசேட அணிவகுப்பு மரியாதை நிகழ்வும் நடத்தப்பட்டது.

### சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்த எதிர்க்கட்சி

நாட்டில் மின் உற்பத்தி நிலையங்களை இயங்கவைப்பதற்காக கடனாக வாங்கிய டொலர்களின் எஞ்சியுள்ள சில டொலர்களை செலவழித்து கொண்டாடப்படும் ஆடம்பரமான சுதந்திர தினம் இன்றைய நிலையில் தேவையற்றது என்பதோடு, நாட்டின் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்த் தரப்பினர் சுதந்திர தின நிகழ்வை புறக்கணித்திருந்தனர்.

அதேபோன்று, தமிழ்த் தரப்புகளின் சிறுபான்மையினக் கட்சிகளும் சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு பொறிமுறையில்...

**கே.குமணன்**

உள்நாட்டு பொறிமுறையில் ஓர் தீர்வும் கிடைக் காது என காலாகாலமாக நாம் கூறிவருகிறோம். அந்த வகையில், அந்தப் பேச்சுக்கே இடமில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று, மத உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தொடரும் நில ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் எதிர்ப்பை காண்பிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலைக்கான கவனயீர்ப்பு விஜயம் ஒன்று இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் குறித்த கவனயீர்ப்பு நடவடிக்கை யில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், நேற்று காலை நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இராச மாணிக்கம் சாணக்கியன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல்வாதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் என சுமார் 75 பேர் வரையில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை அடையாளப்படுத்தியுள்ளனர்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.


தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01 முதல் 15 வரையிலான பகுதிகளில் தமிழன் (தினசரி, வாரஇதழ்), ஜூனியர் பத்திரிகை வீடுகளுக்கே விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார்
0777983308



மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கலாம்

அழையுங்கள்
0761393805



தமிழன் வாசகர்களே!

தமிழன் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமன்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம்

தமிழன் தமிழன்


# அரை நூற்றாண்டாக கல்விப் பணியாற்றும் ஆதம்பாவா ஓர் ஆதர்ஷ புருஷர்



அரை நூற்றாண்டு காலமாக கல்விப் பணியாற்றி வருகின்ற அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும் சாய்ந்தமருது தையா மகளிர் அரபுக் கல்லூரியின் முதல்வருமான மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனியை பாராட்டி கௌரவிக்கும் வைபவமும் அவரது சுயசரிதை நூல் வெளியீட்டு விழாவும் நாளை 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருதில் இடம்பெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது பிரதேசத்தில் பிறந்து, நாடு முழுவதும் கல்வி, சமூக, ஆன்மீகப் பணியாற்றி வருகின்ற மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனியை, ஓர் ஆதர்ஷ புருஷர் என்று வர்ணித்தால் அது மிகையாகாது.

1980களில் நான் பேருவளை ஜாமியா நளீமியாவில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் ஜீ.ஏ.கியூ. பட்டப்படிப்புக்காக அறபு மொழி இலக்கியத்தை ஒரு பாடமாக கற்க வேண்டியிருந்தது. அதற்குரிய உசாத்துணை நூல்களை அங்குள்ள நூலகத்தில் தேடியபோது இஸ்லாமும் கவிதையும் என்ற சிறிய நூல் ஒன்று கிடைத்தது. அது மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா (மதனீ) எம்.ஏ. எழுதிய நூலாக முன் அட்டையில் தென்பட்டபோது மகிழ்ச்சியடைந்து, நூலகத்தில் இருந்தவாறே முழு நேரம் அதனை வாசித்து, முடித்து பரீட்சைக்குரிய குறிப்புகளையும் எழுதிக்கொண்டேன்.

அன்றிலிருந்து அவர் பற்றி அறிந்து, அறிமுகமான அன்னாரை ஒரு நல்லாசானாக, பன்னூலாசிரியராக, ஜம்மியத்துல் உலமாவின் தலைவராக, பல்கலை விரிவுரையாளராக, அறபுக் கல்லூரிகளின் முதல்வராக, சிவில் சமூக மற்றும் இன, மத நல்லிணக்க செயற்பாட்டாளராக, சமூக அரசியல் ஆலோசகராக என்று பல வடிவங்களில் காண்கிறேன்.

எனது அன்புத் தந்தை மர்ஹூம் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மௌலானாவுக்கும் ஆதம்பாவா மௌலவிக்கும் கல்விச் சேவை தொடர்பாக நெருங்கிய உறவாடல்கள் இருந்து வந்துள்ளன. அண்மையில் வெளியிடப்பட்ட பழீல் மௌலானாவின் 'வாழ்வும் பணியும்' என்ற நூலில் பொலனறுவை கண்ட மௌலானா என்ற தலைப்பில் நினைவுக் கட்டுரை ஒன்றை அவர் எழுதியுள்ளமை எனது மனத்திரையில் ஆழப்பதிந்துள்ளது.

ஆதம்பாவா மௌலவியின் தலைமைத்துவத்தில் அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமாவின் செயலாளராக சுமார் 04 வருடங்கள் எனக்கு பணியாற்றக் கிடைத்தது. அவரது அனுபவம், ஆற்றல் ஆளுமை, பிரச்சினை தீர்க்கும் திறன், வழிகாட்டல், ஆலோசனை என்பன மிகவும் மெச்சத்தக்கவையாகும். அவரது இவ்வாறான சிறப்பியல்புகள் எங்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியுடன் இணைந்து அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் முன்னின்று மேற்கொண்ட மஸ்ஜித் பணியாளர்களுக்கான கருத்தரங்குகள், ஜும்ஆ குத்பா மேம்பாட்டு செயற்திட்டங்கள், அறபுக் கல்லூரி பாடவிதான மேம்பாட்டு செயற்திட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவர் உந்து சக்தியாக திகழ்ந்திருக்கிறார்.

அதேவேளை, சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கான இலங்கைப் பேரவையின் முஸ்லிம் சமூகப் பிரதிநிதியாக அவர் பல நாடுகளுக்கு விஜயம் செய்து, சர்வதேச சமூகத்தின் ஓர் அடையாளமாகத் திகழ்கின்றார். இவ்வாறான அனுபவங்களை நூலுருவாக்கம் செய்ய வேண்டும் என்பது எமது அவாவாகும்.

50 வருடங்களுக்கு மேலாக கல்விப் பணியாற்றி, நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான உலமாக்களையும் கல்வியியலாளர்களையும் உருவாக்கியிருக்கின்ற மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா (மதனி) இன்று பொன் விழாப் பூண்டு சமூகத்தின் ஒளி விளக்காகத் திகழ்கின்றார். அவரது கல்வி, சமூக, ஆன்மீகப் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

**அஷ்ஷெய்க் அன்ஸார் மௌலானா**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**மருதமுனை**

# மக்கள் மதிநுட்பத்துடன் நடக்க வேண்டும்!

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள்











படப்பிடிப்பு: லலித் பெரேரா, பிரதீப் தம்பரகே





**74ஆவது சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய உரை**

சுதந்திரமான ஒரு நாட்டின் கௌரவம்மிக்க ஒரு பிரஜையாக வாழ்வதற்குள்ள உரிமையை முன்னிட்டு, வரலாறு முழுவதும் பல நாடுகளின் மக்கள் கலவரங்களை நடத்தியுள்ளார்கள். போர்களை முன்னெடுத்துள்ளார்கள். பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளார்கள்.

இலங்கையிலும், 2,500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றின் பல காலப்பகுதிகளில், வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய துட்டகைமுனு, வலகம்பா, மஹா பராக்கிரமபாகு, விஜயபாகு, ஆறாவது பராக்கிரமபாகு போன்ற சிறந்த மன்னர்கள்



வெளிநாட்டவர்களிடமிருந்து நாட்டை மீட்டு நாட்டை ஒன்றுபடுத்தினார்கள்.

இறுதியாக, ஏறத்தாழ 450 ஆண்டு காலமாக இருந்து வந்த ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிகளிலிருந்து எமது நாடு சுதந்திரம் பெற்று தற்போது 74 ஆண்டுகள் கடந்துள்ளன. சுதந்திரத்தின் பின்னரும்கூட 3 தசாப்தங்களுக்குக் கிட்டிய காலத்தில் பயங்கரவாதச் செயற்பாடொன்றினூடாக இந்நாட்டை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முயன்றமைக்கு எதிராகப் போராடவும் எமக்கு நேர்ந்துவிட்டது.

இன்று இலங்கையானது ஒரு சுதந்திரமான இறைமை பொருந்திய ஜனநாயக நாடாகும். நாம் அதன் அபிமானம் கொண்ட பிரஜைகளாவோம்.

வரலாறு முழுவதும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு எமது நாட்டுக்கு முழுச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், அர்ப்பணிப்புடன் முன்னின்ற நாட்டுப் பற்றுடையவர்கள் எல்லோருக்கும் நான் இவ்வேளையில் எனது மரியாதையைச் செலுத்துகின்றேன்.

### மக்கள் முன்னுள்ள பொறுப்பு

இனம், மதம் என்ற எவ்வித பேதங்களுமின்றி ஒவ்வோர் இலங்கைப் பிரஜைக்கும் இன்று நாட்டின் எப்பிரதேசத்திலும் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் வாழும் உரிமையுண்டு. தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரமும் உள்ளது. அபிப்பிராயங்களைச் சுயாதீனமாக முன்வைப்பதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. நாட்டினுள் முழுமையாக ஊடகச் சுதந்திரம் இருக்கின்றது. இலங்கைப் பிரஜைகள் பரிபூரணமாக ஜனநாயக முறைமையொன்றினூடாகத் தத்தமது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்கும் விரும்பியவர்கள் அரசியல் செயற்பாட்டினூடாக அரச ஆட்சியில் சம்பந்தப்படுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. இது, எம் அனைவரது மகிழ்ச்சிக்கும் அபிமானத்துக்கும் உரியதொரு காரணமாகும்.

சுதந்திரம்மிக்க ஜனநாயக ரீதியிலான நாடொன்றின் மக்கள் என்ற வகையில், நாம் எல்லோருக்கும் சிறப்புரிமைகள் இருப்பது போன்று பொறுப்புகளும் இருக்கின்றன.

எல்லோரும் நாட்டுக்காகத் தமது பொறுப்புகளை நிறைவேற்றும்போதுதான் கிடைத்த சுதந்திரத்தின் உச்சகட்டப் பயன் கிடைக்கும். பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாக இருக்காது.

ஒரு நாடானது, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல அம்சங்களினாலும் வலுவடையும் போதே, அந்நாட்டின் சுதந்திரமானது மிக அர்த்தமுள்ளதாக அமைகிறது. அதற்காக முனைப்பாகப் பங்களிக்கும் சந்தர்ப்பம் அரசைப் போன்று மக்களுக்கும் உள்ளது.

ஒரு நாட்டை உரிய திசையை நோக்கிக் கொண்டுசெல்லும் போது, அதற்காக நாட்டின் அனைவரது உதவியையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம். மாற்றமடையாதோருக்காகக் காத்திருந்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக நாம் திட்டமிட்டுள்ளவற்றைக் கைவிட நாம் தயாரில்லை. எமது நோக்கமானது நாடு சார்பில் சரியானதைச் செய்வதே தவிர எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல.

எதிர்காலத்தை நற்சிந்தனையுடன் நோக்கும் ஆக்கமுறையான சிந்தனையின் மூலம் மட்டும் தான், நாம் எமது வருங்காலப் பயணத்தில் வெற்றிபெற முடியும். வெற்றிகரமானதொரு பயணத்துக்கு வேண்டிய அர்ப்பணிப்புகளைச் செய்தால் மட்டும் தான், நாம் எதிர்கொள்கின்ற சவால்களை வெல்ல முடியும்.

எதிர்மறையான சிந்தனையுடையவர்கள் உலகை மாற்றிவிட மாட்டார்கள். அவர்களுக்கு அதற்கான ஆற்றலும் இல்லை. ஒரு பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைக்காமல் விமர்சனம் மட்டும் செய்யும் பழக்கம் உள்ளவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நோக்கு இல்லை.

### சவாலை வெற்றிகொள்ள தயார்

ஒரு நாட்டின் தலைவர், அநேகமான கஷ்டங்கள், அனர்த்தங்கள், பிரச்சினைகள் மற்றும் சவால்களைத் தொடர்ந்து எதிர்கொள்ள நேரிடுகிறது. ஒரே நோக்கை நோக்கிக் குழுவொன்றை வழிநடத்துவது இலகுவானதல்ல. எவ்வளவு நல்ல நோக்கமாக இருப்பினும், நடைமுறையில் இருக்கின்ற முறைமைகளை மாற்றுவது இலகுவானதல்ல. சில விடயங்களில், உள்நாட்டைப் போன்று அந்நிய சக்திகளும் எம்மை எதிர்த்து ஒன்றுகூடுகின்றன. சிலவேளை உங்களது பக்கத்தில் நிகழும் செயல்கள் எல்லாம் உங்களுக்கு எதிராக நடக்கும் சதியாகத் தோன்றும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

மக்கள் தலைவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது இவ்வனைத்துப் பிரச்சினைகளையும் முகாமைத்துவம் செய்துகொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே தவிர பிரச்சினைகளிலிருந்து தப்பி ஓடுவதல்ல.

அதற்குத் தேவையான ஆக்கமுறையான உளப்பாங்கு எம்முள் இருக்கின்றது. நாடு எதிர்கொள்கின்ற எந்தவொரு சவாலையும் வெற்றிகொண்பதற்காகத் தலைமைதாங்க நான் எப்பொழுதும் தயாராக இருக்கின்றேன்.

ஆக்கமுறையான கருத்துகளைக் கொண்டுள்ள, எதிர்காலம் பற்றிய நல்ல கனவுகளைக் கண்டு அவற்றை அடைய முயன்றவர்கள் தான் உலகை மாற்றியிருக்கிறார்கள். வரலாறு முழுவதிலிருந்தும் இது நமக்குத் தென்படுகிறது.

நாட்டுத் தலைவருக்கும் மக்களுக்கும் இருக்கும் ஆக்கமுறையான சிந்தனையே,



முன்னேறிய ஒவ்வொரு நாட்டினதும் உயர்வுக்குக் காரணமாகியுள்ளது.

புராதன காலத்திலிருந்த எமது மன்னர்கள், ருவன்வெலிசாய, ஜேத்தவனாராமய மற்றும் அபயகிரி போன்ற விசாலமான நிர்மாணங்களை, ஆக்கமுறையான சிந்தனைகளின் மூலம் தான் செய்தார்கள். மின்னேரியா குளம், கலா வாவி, பராக்கிரம சமுத்திரம் மற்றும் யோத எல போன்ற நிர்மாணங்களைச் செய்த தலைசிறந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் அன்று எமக்கு இருந்தது. சீகிரியா போன்ற நகர நிர்மாணிப்புகள் இன்றும் உலகை ஆச்சரியப்படுத்துகின்றன. இலங்கையானது, பண்டைய கால உலகின் பகிரங்கமானதொரு கப்பல் மையமாக இருந்தது. அன்று எமக்கு அப்படியானவற்றைச் செய்யும் இயலுமை இருந்திருந்தால் வருங்காலத்திலும் உலகுடன் போட்டியிடும் ஆற்றல் நமக்கு இருக்க வேண்டும்.

அதற்கு இன்றியமையாத காரணியாக அமைவது நாம் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கைதான்.

கஷ்ட காலங்கள் எப்போதும் அதேபோல் இருப்பதில்லை. கஷ்ட காலங்களை எதிர்கொள்ள, சக்திவாய்ந்த மனிதர்கள் தேவைப்படுவார்கள். அதனால், மற்றவர்களை உளரீதியாக வீழ்த்துகின்ற ஒவ்வொருவரும் இவ்வேளையில் சமூகத்துக்காகச் செய்வது உதவியல்ல. அதனால் இப்பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவைப்படும் ஆக்கமுறையான சிந்தனையை நாட்டில் ஏற்படுத்துவதற்கு நாம் எல்லோரும் பெரும் பொறுப்புடையவர்களாக உள்ளோம்.

### நீண்டகால தீர்வுகள் தேவை

அண்மைக்கால வரலாற்றில் நாம் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டுள்ளோம். பயங்கரவாதத்தை ஒருபோதும் போரினால் தோற்கடிக்க முடியாதென்று அன்று பூரண எதிர்மறைச் சிந்தனையை கொண்டுள்ளவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தபோது, ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, ஜெனரல் விஜய விமலரத்ன போன்ற இராணுவத் தலைவர்கள், பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியுமென்ற ஆக்கமுறையான சிந்தனையை அவர்களின் கீழ் போராடிக் கொண்டிருந்த இராணுவ உத்தியோகத்தருக்குள் ஊடுருவச் செய்தனர். பிற்காலத்தில் சீரான அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் சுமார் மூன்றரை ஆண்டளவான குறுகிய காலத்தினுள் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாகத் தோற்கடிப்பதற்காக எமது ஆற்றல்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையே காரணமானது.

நாம் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவையும் நீண்டகாலப் பிரச்சினைகள் அல்ல.

ஆக்கமுறையுடன் கூடிய ஓர் அணுகுமுறையினூடாக எமக்கு இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடிக்கொள்ள முடியும். ஆயினும், அந்த வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்திக் கொள்வதற்காக நாம் அனைவரும் செய்ய வேண்டிய வேலைப்பகுதி உள்ளது. தத்தமது பொறுப்பை உரியவாறு நிறைவேற்றுவதன் மூலம் நாம் அனைவரும் நாடு சார்பாக எமது உச்சகட்டப் பங்களிப்பை வழங்க முயலவேண்டும்.

கொவிட் 19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான ஒரே தீர்வு தடுப்பூசி ஏற்றுதல் என்பதை நாங்கள் நேர காலத்தில் புரிந்துகொண்டோம். அதற்கமைய இலக்கிடப்பட்ட சனத்தொகையின் 85 சதவீதத்துக்கும் மேலான எண்ணிக்கையினருக்கு 1ஆம், 2ஆம் அலகுத் தடுப்பூசிகளை ஏற்றி நோய் நிலைமையைக் கட்டுப்படுத்தி, வழமையான மக்கள் வாழ்வை மீண்டும் தொடங்க எம்மால் முடிந்தது. இவ்வேளை ஆகும் போது, மக்களுக்கு மூன்றாம் தடுப்பூசியையும் வழங்குவதற்குத் தேவையான தடுப்பூசி மருந்துகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தேடிக்கொண்டு பல வருடங்கள் பின்னோக்கிச் செல்வதைவிட, அதற்கான குறுகியகால மற்றும் நீண்டகாலத் தீர்வுகளைக் கண்டறிவதே காலோசிதமானதாகும். ஓர் அரசு என்ற வகையில் நாம் அதன்மீது கவனத்தைச் செலுத்தியுள்ளோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது என்றால், நாம் கமத்தொழில், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று பிரிவுகளையும் முன்னேற்ற வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் அதேவேளை, ஏற்றுமதி வருமானத்தைக் கூட்டிக் கொள்ளக்கூடிய வழிகளின் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பான எமது தேசிய கொள்கைகள் மிகவும் தெளிவானவையாக இருப்பினும், அவற்றைச் செயற்படுத்தும் போது இதைவிடச் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு ஒவ்வொரு துறையிலும் இருத்தல் வேண்டும்.

எமது நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது முதலீடுகள் முக்கிய காரணியாக அமைந்திருக்கின்றன. முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அரசு எப்பொழுதும் நடவடிக்கை எடுப்பதுடன், உள்நாட்டு முதலீடுகளைப்போல சர்வதேச முதலீடுகளும் அவசியமாகின்றன. விசேடமாக, பாரியளவிலான கருத்திட்டங்கள், நவீன தொழில்நுட்ப அறிவு தேவைப்படும் கைத்தொழில்கள், உலகச் சந்தைக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் புதிய வியாபாரங்களுக்கு சர்வதேச முதலீடுகள் தேவைப்படுகின்றன. அதற்காக, அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராகத் தவறான அபிப்பிராயங்களை மக்களிடம் கொண்டு செல்லும் தரப்பினர் பற்றி மக்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

### பொருளாதார அபிவிருத்தி

தொழில் முயற்சியை ஊக்குவிக்காது, தொழில் முயற்சியாளர்களுக்கு உள்ள தடைகளை அகற்றாது, எம்மால் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த முடியாது. பல ஆபத்துகளின் மத்தியில் தன்னுடையதே என்று தொழிலொன்றை ஆரம்பித்து, பிறருக்கு தொழில்களையும் வருமானம் ஈட்டும் வாய்ப்பையும் அளிக்கின்ற தொழில் முயற்சியாளர்களை இதைவிட மதிப்புடனும், நட்புறவோடும் கவனிக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது. நாட்டினது அபிவிருத்தியில் உள்ள தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பை நன்கு உணர்ந்துகொண்டு இருக்கின்ற சட்டரீதியான சட்டத்துக்குட்பட்டு அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் துரிதமாக வழங்க அரச உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தொழில்களைப் பதிவு செய்யும் போதும் முதலீடுகளுக்கான அங்கீகாரங்களை வழங்கும்போதும் ஏற்படும் பெரும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதனூடாக நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செயற்பாட்டைச் செயற்படுத்த முடியும்.

மிகவும் பயனுறுதியான ஒரு பிரஜையை உருவாக்குவதற்காக பல முறையான கல்வித் திருத்தங்கள் இப்போது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பாடசாலைக் கல்வியை முடித்துவிடும் ஒவ்வொரு பிள்ளையும், நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டில் பங்களிக்கக்கூடிய தொழிலையோ அல்லது கைத்தொழிலையோ பயிலவேண்டும்.

தாம் தெரிந்துகொண்ட துறையில் தனது அறிவைக் கூட்டிக்கொள்வது போன்று, முடியுமானால் தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும். அதனூடாக நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கின்றது.

விவசாயப் பண்ணையில், தொழிற்சாலையில், வேலைத்தளமொன்றில் வியர்வை சிந்தி வேலை செய்யும் மக்கள், நாட்டின் பொருளாதாரத்தில் நேரடிப் பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்கள் எல்லோரையும் நான் கௌரவிக்கின்றேன்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் எமக்குப் பெரிய வளமாக இருக்கின்றார்கள். கடந்த காலத்தில் அவர்கள் நாட்டுக்காக முன்வந்து பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்து எமக்கு ஒத்துழைப்பு நல்கியதை நாம் மறக்கவில்லை. அவர்கள் தொடர்ந்தும் எமது பொருளாதாரத்துக்காகத் தொடர்ந்து வழங்கும் பலம் மிகவும் பாராட்டத்தக்கதாகும். வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் எல்லோரையும் பிறந்த நாட்டில் முதலீடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதன்மூலம், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதற்காக மேலும் செயலாக்க முறையில் பங்களிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது.

(05ஆம் பக்கம் பார்க்க)

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 05ஆம் திகதி, சனிக்கிழமை

# மறக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள்!

''மக்கள் மதிநுட்பத்துடன் நடக்கவேண்டும்'' என்று 74ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஜனாதிபதியின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

***''சுதந்திரமான ஒரு நாட்டின் கௌரவமிக்க ஒரு பிரஜையாக வாழ்வதற்குள்ள உரிமையை முன்னிட்டு, வரலாறு முழுவதும் பல நாடுகளின் மக்கள் கலவரங்களை நடத்தியுள்ளார்கள். போர்களை முன்னெடுத்துள்ளார்கள். பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளார்கள்.***

***இனம், மதம் என்ற எவ்வித பேதங்களுமின்றி ஒவ்வோர் இலங்கைப் பிரஜைக்கும் இன்று நாட்டின் எப்பிரதேசத்திலும் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் வாழும் உரிமையுண்டு. தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரமும் உள்ளது. அபிப்பிராயங்களை சுயாதீனமாக முன்வைப்பதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. நாட்டினுள் முழுமையாக ஊடகச் சுதந்திரம் இருக்கின்றது. இலங்கைப் பிரஜைகள் பரிபூரணமாக ஜனநாயக முறைமையொன்றினூடாக தத்தமது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்கும் விரும்பியவர்கள் அரசியல் செயற்பாட்டினூடாக அரச ஆட்சியில் சம்பந்தப்படுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. இது, எம் அனைவரது மகிழ்ச்சிக்கும் அபிமானத்துக்கும் உரியதொரு காரணமாகும்.***

***சுதந்திரமிக்க ஜனநாயக ரீதியிலான நாடொன்றின் மக்கள் என்றவகையில், நாம் எல்லோருக்கும் சிறப்புரிமைகள் இருப்பது போன்று பொறுப்புகளும் இருக்கின்றன.***

***எல்லோரும் நாட்டுக்காகத் தமது பொறுப்புகளை நிறைவேற்றும் போதுதான் கிடைத்த சுதந்திரத்தின் உச்சகட்டப் பயன் கிடைக்கும். பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாக இருக்காது. ஒரு நாடானது, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல அம்சங்களினாலும் வலுவடையும்போதே, அந்நாட்டின் சுதந்திரமானது மிக அர்த்தமுள்ளதாக அமைகிறது. அதற்காக முனைப்பாகப் பங்களிக்கும் சந்தர்ப்பம் அரசைபோன்று மக்களுக்கும் உள்ளது.***

***ஒரு நாட்டை உரிய திசையை நோக்கிக் கொண்டுசெல்லும் போது, அதற்காக நாட்டின் அனைவரது உதவியையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம். மாற்றமடையாதோருக்காகக் காத்திருந்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக நாம் திட்டமிட்டுள்ளவற்றைக் கைவிடத் தயாரில்லை. எமது நோக்கமானது, நாடு சார்பில் சரியானதைச் செய்வதே தவிர, எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல.***

***எதிர்காலத்தை நற்சிந்தனையுடன் நோக்கும் ஆக்கமுறையான சிந்தனையின்மூலம் மட்டும்தான் நாம் எமது வருங்காலப் பயணத்தில் வெற்றிபெற முடியும். வெற்றிகரமானதொரு பயணத்துக்கு வேண்டிய அர்ப்பணிப்புகளைச் செய்தால் மட்டும்தான், நாம் எதிர்கொள்கின்ற சவால்களை வெல்ல முடியும்.***

***எதிர்மறையான சிந்தனையுடையவர்கள் உலகை மாற்றிவிட மாட்டார்கள். அவர்களுக்கு அதற்கான ஆற்றலும் இல்லை. ஒரு பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைக்காமல் விமர்சனம் மட்டும் செய்யும் பழக்கம் உள்ளவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நோக்கு இல்லை.***

***எமது நாடு, சட்ட ஆதிக்கத்தைப் பாதுகாக்கும், சர்வதேச சமவாயங்களை மதிக்கும் நாடொன்றாகும். குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இலங்கைக்குப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சார்த்துவதற்கு ஏதேனுமொரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டபோதும், எவ்விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு உடந்தையாக இருக்கவில்லை என்பதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறு வதற்கு இடமளிக்கவும் மாட்டாது. எக்காரணத்தைக்கொண்டும் மீண்டும் இந்நாட்டில் அடிப்படைவாதம் தலைதூக்க நாம் இடமளிக்கமாட்டோம். இந்த அரசாங்கம் மக்களுக்கு உறுதியளித்த அதேவிதத்தில் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்துள்ளது''.***

இலங்கை திருநாடு முன்னேறுவதற்கு தமிழ், முஸ்லிம் தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் பாடுபட்டிருக்கிறார்கள் என்பது ஜனாதிபதியின் உரையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இலங்கையை தாய்த்திருநாடாக எண்ணிய அந்த மக்கள் இன்னமும் இரண்டாந்தர பிரஜைகளாகவே நடத்தப்படுவது ஜனாதிபதிக்கு தெரியவில்லையா?

இலங்கையின் சிறுபான்மை இன சமூகம் எந்தளவு பெரும்பான்மை சிங்கள மக்களிடமிருந்து துருவப்பட்டிருக்கிற தென்பதை கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் காட்டின. இன்றுவரை அந்த துருவப்படுத்தலை அப்படியே வைத்திருக்கவே ஆளுந்தரப்பு விரும்புகிறதா என்ற ஐயம் இப்போது எழுகிறது.

ஜனாதிபதியின் சுதந்திர தின உரையில் புதிய அரசியலமைப்பு குறித்தோ அல்லது நாட்டில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகள் குறித்தோ எதனையும் குறிப்பிடாமை தமிழ் பேசும் மக்களுக்கு ஏமாற்றத்தை தந்திருக்கிறது.

இந்திய மீனவர்களின் ஊடுருவலால் வடக்கில் எழுந்துள்ள மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணம் உட்பட்ட விடயங்களை ஜனாதிபதியின் சுதந்திர தின உரையில் தொட்டுச் சென்றிருக்கலாம்.



# மதிப்புமிக்க தலைவர் சம்பந்தன்!

இன்று 2022, பெப்ரவரி 05, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவிற்கு 89ஆவது பிறந்தநாள்.

1933ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி பிறந்தார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சம்பந்தனின் தந்தை ஏ. இராஜவரோதயம், கல்லோயா திட்டத்தில் பணியாற்றியவர். சம்பந்தன் பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞரானார். லீலாதேவி என்பவரைத் திருமணம் புரிந்து இவர்களுக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி என மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

பிரித்தானிய முடியின்கீழ் இலங்கை இருந்தபோது பிறந்தவர் இராஜவரோதயம் சம்பந்தனாவார். டொனமூர் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகளில் பிறந்தவர். அதாவது, இலங்கை 1948இல் சுதந்திரம் பெறும்போது அவருக்கு 15 வயது முடிவடைய ஒரு நாள் குறைவு.

இலங்கை சட்டக் கல்லூரியில் கற்று வழக்கறிஞராக பணிபுரிந்த சமயம் 1961ஆம் ஆண்டு காலப்பகுதியில் தந்தை செல்வா தலைமையில் இலங்கை தமிழரசுக் கட்சியால் இடம்பெற்ற அகிம்சை ரீதியிலான போராட்டங்களில் அவர் பங்குபற்றியதுடன், பனாகொடை இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை பெற்றவர்.

1976, மே 14இல் தந்தை செல்வா தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியால் வட்டுக்கோட்டையில் எடுத்த தமிழீழ தீர்மானத்தை முழுமையாக ஏற்று கடந்த 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தனது 44ஆவது வயதில் முதன்முதலாக திருகோணமலையில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு அந்தத் தேர்தலில் 15,144 வாக்குகளை பெற்று வெற்றியடைந்து நாடாளுமன்றம் சென்றார்.

1983 செப்டெம்பரில் நாடாளுமன்ற ஆசனத்தை இழந்த இரா. சம்பந்தன், அதன் பின்னர் 1989இல் 6048 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். மற்றும் 1994 தேர்தல்களில் தோல்வியடைந்திருந்தார்.

அந்தத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்த சட்டத்தரணி அருணாசலம் தங்கத்துரை, 1997 ஜூலை 5ஆம் திகதி திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி நிகழ்வில் கலந்துகொண்டபோது அங்கு இடம்பெற்ற தாக்குதலில் தங்கத்துரை படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அருணாசலம் தங்கத்துரையின் படுகொலையின் பின், ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பட்டியலில் அடுத்த நிலையிலிருந்து 1997ஆம் ஆண்டு சம்பந்தன் நியமிக்கப்பட்டார். 1983ஆம் ஆண்டு நாடாளுமன்ற ஆசனத்தை இழந்த சம்பந்தன் ஐயா 1997ஆம் ஆண்டு ஏறத்தாழ 14 ஆண்டுகளின் பின் மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, 2002இல் இடம்பெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளராக களமிறங்கி அந்த நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் திருகோணமலை மாவட்டத்தில் 40,110 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

இதன்போது 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்த சமயம், அதில் ஆனந்தசங்கரியும் சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினராக கிளிநொச்சி தொகுதியிலிருந்து தெரிவாகியிருந்தார்.

அப்போது விடுதலைப் புலிகள் வடக்கு, கிழக்கு நிலப்பரப்பில் 70 சதவீத ஆதிக்கத்தில் ஒரு நடைமுறை அரசை நிர்வகித்த காலம். அதன் காரணமாக விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதியாக தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள சம்பந்தன் உட்பட அனைவரும் ஏற்றிருந்தனர். ஆனால், ஆனந்தசங்கரி மட்டும் அதை ஏற்காமையினால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உட்பூசல் தலைதூக்கியது. இதன் காரணமாக அடுத்த தேர்தலான 2004இல் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியில் வேட்புமனு செய்யவும் உதயசூரியன் சின்னத்தை தரவும் ஆனந்தசங்கரி மறுத்தார்.

அதனால் பின்னர் 2004, பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை தமிழரசுக் கட்சியில் வேட்புமனு தாக்கல்செய்து வீட்டு சின்னம் சார்பில் வடக்கு, கிழக்கிலிருந்து சரித்திரத்தில் முதன்முறையாக 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். அந்தத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நானும் (பா.அரியநேத்திரன்) தெரிவு செய்யப்பட்டேன். இரா.சம்பந்தன் ஐயா திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக 2004இல் 47,735 வாக்குகளுடனும், 2010இல் 24,448 வாக்குகளுடனும், 2015இல், 33,834வாக்குகளுடனும் மற்றும் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு 21,422 வாக்குகளுடனும் வெற்றிபெற்றிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகும்போது 2001இல் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம், மாமனிதர் ரவிராஜ், ஆனந்தசங்கரி ஆகியோர் இலங்கை தமிழரசுக் கட்சியில் இருந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்தவர்கள் என்பதால் இலங்கை தமிழரசுக் கட்சி என்ற பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகளில் தாய்க்கட்சியாக இருந்துள்ளதே உண்மை வரலாறு. சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகும்போது இலங்கை தமிழரசுக் கட்சி அதில் அங்கம் வகிக்கவில்லை எனக் கூற முற்படுவது தவறு என்பதை இதில் பதிவு செய்கிறேன். வரலாறுகள் உண்மையாக எழுதப்படவேண்டும் என்பதே எனது நோக்கம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவராக 2004இல் இரா.சம்பந்தன் ஐயாவை 22 நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாமே ஏகமனதாக தெரிவுசெய்தோம். 2004 தொடக்கம் 2010 வரையும் வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாத உயிர் அச்சுறுத்தல் இருந்தது. மாமனிதர்களான மட்டக்களப்பு ஜோசப் பரராசசிங்கம், யாழ்ப்பாணம் ரவிராஜ், சிவனேசன், அம்பாறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட காலமும் 2004 தொடக்கம் 2009 வரை என்பதை மறுக்கமுடியாது. உலக அரசியல் வரலாற்றில் ஒரே தடவை நாடாளுமன்ற காலத்தில் நான்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்ட சம்பவமாக இது அமைந்தது. இந்த இக்கட்டான காலத்திலிருந்து இன்றுவரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவராக இரா.சம்பந்தன் 89ஆவது வயதிலும் தொடர்ந்தும் உள்ளார்.

2015, செப்டம்பர் 03 தொடக்கம் 2018, டிசம்பர்18 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததன் மூலம், அந்தப் பதவியை வகித்த இரண்டாவது தமிழர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார். இன்று 89 வருட வாழ்வில் 29 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்திருக்கிறார் இரா. சம்பந்தன்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றின் முக்கிய காலகட்டங்கள், திருப்புமுனைகள் என்பவற்றை நேரடியாகப் பார்த்த, அதில் பலவற்றில் பங்காளியாக இருந்த பழுத்த அனுபவமிக்க தலைவர் இரா. சம்பந்தன் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதுபோலவே நாடாளுமன்ற மரபுகளை, நடைமுறைகளை நன்கறிந்த, அனுபவமிக்க சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுள் இரா. சம்பந்தன் முக்கியமானவர் என்பதிலும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

இன்று கூட அவர் நாடாளுமன்றத்தில் எழுந்து உரையாற்றினால், அந்த உரை பெருமளவிற்கு அமைதியாக கேட்கப்படுமளவிற்கு மதிப்புமிக்க மனிதராகவே அவர் பார்க்கப்படுகிறார். அண்மைய ஆண்டுகளில் அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சந்தர்ப்பங்கள் குறைவு என்றாலும், அவர் ஆற்றியிருந்த ஒருசில உரைகள் கூட ஆழமானதாகவும், அர்த்தபுஷ்டியுள்ளவையாகவும் அமைந்திருந்தன.

அவரது சில நாடாளுமன்ற உரைகள், இலங்கை நாடாளுமன்றம் கண்ட ஆகச்சிறந்த உரைகள் பட்டியலில் நிச்சயம் இடம்பெறும் தகைமிக்கவை. ஆனால், தற்போது அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதில்லை என்பது மட்டுமல்ல, நாடாளுமன்றத்திற்கு செல்வதுகூட மிகக் குறைவு என்பது வருத்தத்திற்குரிய விடயமாக இருக்கிறது.

இது எல்லாவற்றிக்கும் மேலாக தந்தை செல்வா காலத்திலும், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் காலத்திலும் இணைந்து தமிழ்த் தேசிய அரசியலில் செயல்பட்ட ஒரு தலைவர் இரா.சம்பந்தன் மட்டுமே.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சிக் கிளையினால் கடந்த 2014ஆம் ஆண்டு “தாயகத் தலைமகன்” (Thayakththalimahan) எனும் உயர் கௌரவம் வழங்கப்பட்டது.

கனேடிய தமிழர் பேரவை 2016, ஜனவரியில் “வாழும் வீரர்” (Living Hero Award) எனும் கௌரவம் வழங்கப்பட்டது

89ஆவது வயதிலும் உள்ளம் சோராமல் இலங்கை நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியில் உள்ளவர் என்றால் இலங்கை வரலாற்றில் இரா.சம்பந்தன் மட்டுமே.

இவ்வாறான தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் இன்று 89ஆவது பிறந்தநாளில் கால்பதிக்கிறார்.

திருகோணமலை மாவட்ட மக்களின் வாக்குகளால் தெரிவாகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவராகவும், வடக்கு, கிழக்கு வாழ் தமிழினத்தின் தலைவராகவும் சர்வதேசத்தின் தலைவர்களால் மதிக்கப்படும் ஒருவராக இரா.சம்பந்தன் உள்ளார் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.



பா. அரியநேத்திரன்

# கொழும்பு குற்றவியல் பிரிவுக்குச் சென்ற பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

## காரியாலய வளாகத்தில் பொலிஸ் அதிகாரிகள் குவிப்பு




பொரளை சர்வ புனிதர்கள் தேவாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கைக்குண்டு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பிரான்சிஸ் முனீந்திரன் என்பவரின் சுகநலம் விசாரிப்பதற்காக பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று (04) கொழும்பு குற்றவியல் பிரிவுக்குச் சென்றிருந்தார்.

பொரளை சர்வ புனிதர்கள் தேவாலயத்தில் நேர குண்டைபோன்று தயார்ப்படுத்தப்பட்ட கைக்குண்டை வைத்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட தேவாலயத்தின் ஊழியராக கடமையாற்றிய பிரான்சிஸ் முனீஸ்வரன் என்பவர் தற்போது கொழும்பு குற்றவியல் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

பேராயர் கொழும்பு குற்றவியல் பிரிவுக்குச் சென்றபோது 50இற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள், காரியாலயத்தை சுற்றி கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கொழும்பு பேராயர், மக்கள் அமைப்பின் பணிப்பாளர் ஜூட் கிஷாந்த கருத்து தெரிவிக்கையில்,

முனி என்றழைக்கப்படும் இவரே அன்று தேவாலயத்திலிருந்து கைக்குண்டை கண்டு பிடித்திருந்தார். இடம்பெறவிருந்த பேரழிவை அவரே தடுத்து நிறுத்தினார். அதனால், இவர் மீது பேராயருக்கு பெரும் மரியாதை ஏற்பட்டுள்ளது. அவரை விடுதலைசெய்ய வேண்டும் என்றே நாங்கள் நம்புகிறோம்.

இந்த கைக்குண்டு தனிநபரின் நோக்கத்துக்காக வைக்கப்பட்டதல்ல. மாறாக, இதுவொரு சூழ்ச்சிகரமான சம்பவம் என்பதில் எமக்கு பெரும் சந்தேகம் உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் நிறைவடைந்து ஜனவரி 14ஆம் திகதியுடன 1000 நாட்கள் நிறைவடைகின்றன. இந்நிலையிலேயே ஏதாவது நெருக்கடியை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தவோ அல்லது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை மூடிமறைக்க எடுத்த முயற்சியா என்பதில் எமக்கும் பெரும் சந்தேகம் இருப்பதாக குறிப்பிட்டார்.



23 ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது விழா கடந்த புதன்கிழமை கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், ஆ.லெ.மு.இர்ஷாத். பாலரஞ்சனி ஜெயபாலன், ஜன்ஸி கபூர். சுகுணாகுமார் ஆகியோருக்கு விருதுகளும் சான்றிதழ்களும் பணப்பரிசுகளும் கொடகே நிறுவனத்தின் நிறுவுனர்களான தேசபந்து சிரிசுமன கொடகே தம்பதியினரால் வழங்கப்பட்டது. கவிஞர் மேமன் கவியும் புரவலர் ஹாசிம் உமரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## போதை மாத்திரைகள் - கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

(ரவ்பீக் பாயிஸ)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருகன் கோவிலடி இலிங்க நகர் பிரதேசத்தில் 1500இற்கும் அதிகமான போதை மாத்திரைகள் மற்றும் கேரள கஞ்சாவுடன் இருவரை கைதுசெய்துள்ளதாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை சர்தாபுர விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் (03) இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 1500இற்கும் மேற்பட்ட போதை மாத்திரை வில்லைகள் மற்றும் 700 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.









74ஆவது சுதந்திர தினமான வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்பினர் என அனைவரும் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நேற்று (04) முன்னெடுத்திருந்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் - குமணன்)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு குருந்தூர் மலைக்கு விரைந்த கூட்டமைப்பு






74ஆவது சுதந்திர தினமான நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறிப்பாக, இவ்வாறு விஜயம் மேற்கொண்டவர் கள் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளைக்கு முரணாக கட்டப்படுகின்ற கட்டடங்களை பார்வையிட்டதுடன், அங்கு ஆதி ஐயனார் திரிசூலம் இருந்த இடத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இந்த விஜயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சாணக்கியன் இராசமாணிக்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.செயோன் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





கொண்டாடப்பட்ட 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 197 கைதிகளுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இதன்படி வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று (04) 17 கைதிகள் விடுதலைசெய்யப்பட்டனர். (படப்பிடிப்பு:- ஏஷான் தசநாயக்க)

# மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட ஓமானில் சிக்கித் தவித்த 16 பணிப்பெண்கள்

சுற்றுலா விசாவை பயன்படுத்தி ஓமானுக்கு வீட்டுப் பணிக்குச் சென்றிருந்த நிலையில் பல்வேறு சிரமங்களுக்குள்ளான பெண்கள் சிலரை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாயப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

16 பெண்கள் அடங்கிய குழுவினரே இவ்வாறு மீண்டும் அழைத்துவரப்பட்டுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவின் தலையீட்டின் மூலம் குறித்த பெண்களை மீண்டும் அழைத்துவர நடவடிக்கை எடுத்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவின்றி வெளிநாடு சென்றுள்ளதுடன், தரகர்கள் குறித்த பெண்களை பலவந்தமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

இதன்போது தாக்குதல், துஷ்பிரயோகம் மற்றும் சம்பளம் கொடுக்காமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக குறித்த பெண்கள் ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு வருகை தந்திருந்ததாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு சரியான வயது நிறைவுறாத பெண்களும் அவர்களில் உள்ளடங்குவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பெண்களிடம் கடவுச்சீட்டு இருக்காமையினால் தூதரக காரியாலயத்தின தலையீட்டினூடாக தற்காலிக கடவுச்சீட்டை தயாரித்து மீண்டும் நாட்டுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளாக அந்தப் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பெண்கள் சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்த வர்த்தகர்களை சட்டத்தின்முன் கெண்டுவருவதற்கான விசாரணைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவு அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.




## மக்கள் மதிநுட்பத்துடன்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம் முன்னிலையிலுள்ள சவால்களை வெற்றிகொண்டு, எமது வருங்காலக் குறிக்கோள்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதாயின், நாம் எல்லோரும் நம்மை மாற்றிக்கொள்ளவேண்டியுள்ளது. நம் எல்லோருக்கும் அதற்காக சில அர்ப்பணிப்புகளைச் செய்ய நேரிடலாம். அதற்குத் தேவையான எடுத்துக்காட்டுதலைத் தருவதற்கு நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் நான் தயாராக இருக்கின்றேன். தற்போதும் நான் அதனை உச்சக்கட்டத்தில் செய்துகொண்டிருக்கின்றேன். எல்லா அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல்வாதிகள் ஆகிய அனைவரும் நாட்டுக்கு முன்மாதிரியாக எப்போதும் செயற்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் மக்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்வீர்களாயின், நாட்டின் பெரும்பாலான மக்களும் உங்களைப் பின்பற்றுவார்கள்.

### அடிப்படைவாதம் இனியில்லை

தேசிய தலைமைத்துவத்துக்கு எதிரான சக்திகள், மிகச் சூட்சுமமான பல பொய்ப் பிரசாரங்களினூடாக மக்களை தவறான பாதையில் எடுத்துச்செல்ல முயல்கின்றன. எப்போதும் மதிநுட்பத்துடன் நடந்துகொள்ளுமாறு இந்நாட்டு மக்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். தரவுகளின் அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்துப் பார்த்து உண்மையை அறிந்துகொண்டு தீர்மானங்களை எடுப்பதாயின், ஒருவராலும் மக்களைத் தவறான பாதையில் கொண்டுசெல்ல முடியாது.

எதிர்காலச் சந்ததிக்காக வென்றெடுத்த சுதந்திரத்தை எப்பொழுதும் பாதுகாப்பேன் என்றும் எமது நாட்டின் ஒற்றையாட்சி, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையைப் பாதுகாப்பேன் என்றும் அரச தலைவர் என்ற வகையில் நான் உறுதியளித்துள்ளேன். நாங்கள் எப்பொழுதும் அந்த உறுதியுரையைப் பாதுகாப்போம்.

கலாசாரச் சுதந்திரம் ஒவ்வோர் இனத்துக்கும் முக்கியமானது. ஆயிரம் வருடகால வரலாற்றைக் கொண்ட பாரம்பரிய சம்பிரதாயங்கள், விழுமியங்கள் மற்றும் எமது பண்புகளைப் பாதுகாத்தல் என்பவற்றை எமது அடிப்படைப் பொறுப்பாகக் கருதுகின்றோம். கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களுக்குள்ளாகி அழிந்துகொண்டிருந்த தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

எமது நாடு சட்ட ஆதிக்கத்தைப் பாதுகாக்கும், சர்வதேச சமவாயங்களை மதிக்கும் நாடொன் றாகும். குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இலங்கைக்குப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சார்த்துவதற்கு ஏதேனுமொரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டபோதும், எவ்விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு உடந்தையாக இருக்கவில்லை என்பதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கவும் மாட்டாது.

எக்காரணத்தைக்கொண்டும் மீண்டும் இந்நாட்டில் அடிப்படைவாதம் தலைதூக்க நாம் இடமளிக்க மாட்டோம். இந்த அரசாங்கம் மக்களுக்கு உறுதியளித்த அதே விதத்தில் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்துள்ளது.

நாங்கள் முன்வைத்த சுபீட்சத்தின் நோக்கு எனும் கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவே மக்கள் தற்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினார்கள்.

நாங்கள் முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் பசுமைக் கைத்தொழில், புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாட்டு மேம்பாடு, புதிய உலகத்துக்கு ஏற்ற கல்வித் திருத்தங்கள், தேசிய தொழில் முயற்சியாண்மையை ஊக்குவித்தல், ஏற்றுமதி பல்வகைத்தன்மை மற்றும் பெறுமானத்தை அதிகரித்தல், பொருளாதாரத்தின் புதியதொரு பாய்ச்சலுக்காக தொழில்நுட்பப் பாவனையைப் பரவலாக்கல் போன்ற நாம் அடையாளம் கண்டுகொண்ட முன்னுரிமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.



பயன்மிக்க பிரஜை, மகிழ்ச்சியுடன் வாழும் குடும்பம், ஒழுக்கமான குணநெறிகளைக்கொண்ட சமூகம் மற்றும் சுபீட்சத்தின் நோக்கு ஆகிய ஆரம்பகட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

மிகவும் கஷ்டமானதொரு சந்தர்ப்பத்தில்தான் எனக்கு நாட்டின் தலைமைத்துவம் அளிக்கப் பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளினுள் எதிர் பாராத பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண நேரிட்டது. அவ்வனைத்துக் கஷ்டங்களுக்கும் மத்தியில் பல அபிவிருத்தித் திட்டங்கள் எமது அரசால் மேற்கொள்ளப்பட்டன.

எனது எஞ்சிய பதவிக் காலத்தினுள் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களெல்லாம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எந்தளவு தடைகள் வந்தாலும் எமது நாட்டின் பெரும்பான்மை மக்கள் எதிர்காலத்துக்கான பங்களிப்பை வழங்கினால், எம்மால் அந்நோக்கங்களை நிறைவேற்ற முடியும்.

சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை எய்திய அபிமானமிக்க தேசத்தைக் கட்டி யெழுப்புவதற்காக ஒன்றுசேருமாறு அனைத்து நாட்டுப்பற்றுள்ள இலங்கையர் களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.







# தொல்லியல் சட்டத்தில் கொடுக்கப்படாத அதிகாரத்தை குருந்தூர்மலையில் செயற்படுத்துகிறார்கள்

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



(கே .குமணன்)

“குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றில் நாங்கள் ஓர் இடைக்கால தடையினை கோரியுள்ளோம். அந்தத் தடை இன்னும் கொடுக்கப்படவில்லை. அந்தத் தடை கொடுக்கப்படுவதற்கு முன்னதாக அவர்கள் தங்களின் எதிர்ப்புப் பத்திரங்களை கொடுத்துள்ளார்கள். தடை உத்தரவு தேவையில்லை என்று சொல்வதற்காகதான் இன்று சகலரையும் சுதந்திரமாக வரவிட்டுள்ளார்கள்” - என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

74ஆவது சுதந்திர தின நாளான நேற்று பௌத்தமயமாக்கல் மூலம் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குள்ளாப்பட்டுவரும் முல்லைத்தீவு மாவட்டம் குமுளமுனை, குருந்தூர்மலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டதரணியுமான எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் இணைந்து விஜயம் செய்திருந்தனர். இதன்போது கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொல்லியல் திணைக்களம் தொல்லியல் அடையாளங்களை பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட திணைக்களம் எதையும் கட்டுவதற்கான அனுமதி கிடையாது. கன்னியா வழக்கிலும் நாங்கள் இதனை நிறைவேற்றியுள்ளோம்.

இன்று குருந்தூர்மலையில் இந்துக்களின் வழிபாட்டுத்தலத்திற்கு அவர்கள் செல்ல முடியாதவாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றில் து.ரவிகரன் மற்றும் நாடாளுன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிறீதரன் ஆகியோர் மனுதாரர்களாக உச்சநீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

அவர்களால் கொடுக்கப்பட்ட வழக்கில் கூட இவ்வாறு கட்டுமானப்பணிகள் நடைபெற்றதாக சொல்லவில்லை அதற்கு முன்னர் ரவிகரன், சிறீதரன் ஆகியோர் இங்கு வந்தபோது அடிமட்டத்தில்தான் இருந்ததாக எனக்கு சொல்லியுள்ளார்கள். ஆகையால், குருந்தூர்மலையில் சட்டம் கொடுக்காத ஒரு அதிகாரத்தினை தொல்லியல் திணைக்களம் கையில் எடுத்து புதிதாக ஒரு தாதுகோபுரம் கட்டுவதை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. எதிர்வரும் நாட்களில் மனுதாரர்களின் மறுப்பு சத்தியக்கடதாசியில் நாங்கள் இந்த விடயம் குறித்து சொல்கின்றோம். இன்று அந்த இடத்தில் சென்று வழிபடக்கூடியதாக இருந்திருக்கின்றது.

ஆனால், கிராமமாக இந்த இடத்தில் வந்து வழிபடுபவர்கள் வந்து போகக்கூடியவாறு இருக்கவேண்டும். அதற்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது. அங்கு வழிபடுவதற்கு அடையாளமாக வைத்திருந்த சூலம் உடைக்கப்பட்டு ஒரு குழிக்குள் போடப்பட்டுள்ளதை து.ரவிகரன் கண்டு ஒரு ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளையில் இந்த குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றில் நாங்கள் ஒரு இடைக்கால தடையினை கோரியுள்ளோம். அந்த தடை இன்னும் கொடுக்கப்படவில்லை. அந்த தடை கொடுக்கப்படுவதற்கு முன்னதாக அவர்கள் தங்களின் எதிர்ப்புப் பத்திரங்களை கொடுத்துள்ளார்கள். ஏன் தடை உத்தரவு தேவையில்லை என்று சொல்வதற்காக தான் இன்று சுதந்திரமாக வரவிட்டுள்ளார்கள்.

அந்த தடை உத்தரவில் தொல்லியல் திணைக்களத்திற்கு சட்டத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரம் தொல்லியல் அடையங்களை பாதுகாப்பது மட்டும்தான். தொடர்ச்சியாக கட்டடங்கள் எதுவும் அமைக்கக்கூடாது என்றும் நாங்கள் கேட்டுள்ளோம். நீதிமன்றம் அதனை விசாரித்துக்கொண்டிருக்கின்ற வேளையில் அவர்கள் சீக்கிரமாக இதனை கட்டி முடிக்கவேண்டும் என்ற தோரணையில் உடனடியாக இதனை கட்டுகின்றார்கள்போல் தென்படுகின்றது. இதனை நீதிமன்ற கவனத்திற்கு கொண்டுவருவோம் - என்றார்.

# ஹபரண பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வாகனத்தை தாக்கிய காட்டுயானை

(கண்டி நிருபர்)



ஹபரண பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தில் காட்டு யானையை புகைப்படம் எடுக்கச் சென்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த வாகனத்தை காட்டு யானை தாக்கியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யுக்ரைன் நாட்டு தம்பதிகள் இருவர், தாங்கள் வருகை தந்த வாகனத்தை நிறுத்தி, அங்கிருந்த யானை ஒன்றைப் புகைப்படம் எடுக்க முற்பட்டுள்ளனர்.

அப்போது கோபமடைந்த அந்த யானை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தைத் தாக்கியுள்ளது.

ஹபரண பிரதான பாதையில் இச் சம்பவம் இடம்பெற்றதால், அவ்வழியாக சென்ற மற்றொரு டிப்பர் ரக வாகன சாரதி, இவர்களுக்கு உதவி செய்து காப்பாற்றியுள்ளார். இதனால், வாகனத்தில் வந்தவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்று விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் வாகனம் சேதமடைந்துள்ளதோடு, இவ் வாகனம் வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு வாகனம் எனத் தெரிய வருகிறது.

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி மீனவர்கள் தொடர்ந்து ஐந்தாவது நாளாக நேற்றும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்று போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீனவர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துமீறி நுழையும் மீனவர்களை கைது செய்வதற்கு கடற்படையினருக்கு உத்தரவிட கோரியும், 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இழுவை மடி தடை சட்டம் மற்றும் வெளிநாட்டு படகுகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்கு படுத்தும் 2018ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக்கோரியும் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யவுள்ளேன். அதற்கு வடக்கு மீனவ சங்கங்களின் ஆதரவு வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# திடீரென மயங்கி விழுந்த மாணவர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள்

## வவுனியா சுதந்திர தின நிகழ்வில் சம்பவம்





(வவுனியா நிருபர்)

வவுனியாவில் பாடசாலை மாணவிகள் உள்ளிட்ட 18 பேர் திடீரென மயங்கி விழுந்துள்ளனர். இலங்கையின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வு நகரசபை மைதானத்தில் நேற்று (04) இடம்பெற்றது. இதன்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதன்போது அணிவகுப்பில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்பு படை வீரர்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் பிரதான நிகழ்வு கொட்டகைக்கு முன்னால், அணிவகுப்பு மரியாதை முடிந்த பின்னர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக குறித்த மாணவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், சிவில் பாதுகாப்பு தரப்பினர் மைதானத்தில் இருந்தமையினால், வெயில் தாக்கம் காரணமாக 13 மாணவர்களும், 05 சிவில் பாதுகாப்புப் படை வீரர்களுமாக 18 பேர் மயக்கமடைந்துள்ளனர்.

அவர்களை உடனடியாக அழைத்துச் சென்று முதலுதவி வழங்க செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பல மாணவர்கள் மயங்கி விழுவதை அவதானித்த நிகழ்வின் அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், வெயிலில் நின்ற மாணவர்களுடன் உரையாடி விட்டு உடனடியாக அம் மாணவர்கள் அங்கிருந்து சென்ற பின் ஏனைய நிகழ்வுகளை நடத்துமாறு அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இதன் பின் மாணவர்கள், சிவில் பாதுகாப்பு படையினர், பொலிஸார், இராணுவத்தினர் மைதானத்திலிருந்து கலைந்து செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவிசாவளையில் வேன் விபத்து: சாரதியுடன் ஐவர் வைத்தியசாலையில்

(பதுளை நிருபர்)



அவிசாவளையிலிருந்து, ஹப்புத்தளையை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேனொன்று பிளக்வுட் பெருந்தோட்டம் அருகே, பாதையை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று (04) இடம்பெற்றுள்ளது.

விபத்திற்குள்ளான வேனில் பயணித்த 4 பெண்களும் வேன் சாரதியும் காயமடைந்த நிலையில், ஹல்துமுள்ளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து, ஹல்துமுள்ளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சாரதியின் நித்திரை கலக்கமே, இவ் விபத்திற்கு காரணமென்று பொலிஸார் தெரிவித்தனர்.

# மலையகத்தில் கொண்டாடப்பட்ட சுதந்திர தினம்...




(படங்கள் : கம்பளை, கினிகத்தேனை, நுவரெலியா, ஹட்டன், பதுளை நிருபர்கள்)

# டக்ளஸ் தேவானந்தா மீனவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்

## சாணக்கியன் வலியுறுத்து





யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமான தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றை கோரி தொடங்கப்பட்ட போராட்டம் 4ஆவது நாளாக நேற்று முழு வீச்சுடன் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் நேற்று பருத்தித்துறை – சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும், இரா.சாணக்கியனும் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதன்போது மீனவர்கள் மத்தியில் கருத்து வெளியிடும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு



வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

"போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டிருந்தார்.

மீனவர்கள் மதுபோதையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த கருத்து குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்கள் மத்தியில் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும்.

அத்துடன், மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக பதவி விலக வேண்டும்'' - எனக் குறிப்பிட்டார்.

# மன்னார் செயலகத்தில் இடம்பெற்ற இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம்







(மன்னார் நகர் நிருபர்)

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 74ஆவது சுதந்திர தின விழா நேற்று வெள்ளிக்கிழமை (4) மன்னார் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் மன்னார் செயலகம் மற்றும் பிரதேச செயலகப் பணியாளர்கள் மன்னார் பஸார் பகுதியிலிருந்து மாவட்ட செயலகம் வரை தேசிய கொடியை ஏந்தியவாறு நடைபவனியாக மாவட்ட செயலகம் வரை சென்றனர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த படைவீரர்கள் மற்றும் ஏனையவர்களுக்காக 2 நிமிட மௌன பிரார்த்தனையும், நாட்டுக்காகவும் நாட்டுமக்களுக்காகவும் சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து சர்வமத நிகழ்வுடன் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றதோடு இறுதியாக ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் கீழ் மர நடுகையும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், உதவி அரசாங்க அதிபர், பொலிஸ், இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகப் பணியாளர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மாவை சேனாதிராஜாவுக்கு கொரோனா!



(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தன்னுடன் நெருங்கிப் பழகியவர்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# யாழ். பல்கலைக்குள் நுழையத் தடை; வாயிலில் கறுப்புத்துணி கட்டிய மாணவர்கள்!



(யாழ். நிருபர்)

யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் கறுப்பு நிற துணி கட்டப்பட்டு நேற்று சுதந்திர தினத்தை கரிநாளாக மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெறும் சிவில் சமூகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக, பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்காலுக்கு செல்வதற்காக, தமது வாகனங்களை பல்கலைக்கழகத்தில் தரித்துவிட்டு செல்ல முற்பட்ட நிலையில், பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மாணவர்கள் உள்நுழைய அனுமதி மறுக்கப்பட்டதோடு, பரமேஸ்வரா ஆலயத்திற்கு செல்பவர்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று (நேற்று) சுதந்திர தினம் என கொடியேற்றுகிறீர்கள். ஆனால், பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்கள், ஆலய வழிபாட்டை மேற்கொள்பவர்கள் செல்ல முடியாதா? என மாணவர்களால் கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுபவர்களையே நாங்கள் அனுமதிக்கவில்லை என பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், மாணவர்களால் சுதந்திர தினம் கரிநாள் என தெரிவித்து கறுப்புத் துணி பிரதான வாயிலில் கட்டப்பட்டது.

# இந்தியா நடத்தும் செயற்கைக் கால் முகாம் திறந்து வைப்பு





இந்திய - இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவரும் நீர்ப்பாசன அமைச்சரும், தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரும், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோரால் கம்பஹாவில் உள்ள ரணவிரு சேவா அதிகார சபை வளாகத்தில் செயற்கை கால்களை வழங்குவதற்கான முகாம் அண்மையில் கூட்டாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் நடைபெறவிருக்கும் இந்த முகாமின் மூலமாக நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலும் பரந்து காணப்படும் சகல இலங்கை மக்களுக்கும் பல்வேறு சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் ஆதரவளிக்கப்பட்டிருக்கும் இந்த முகாம், இந்தியாவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமும் விசேட தேவையுடையோரின் சமூக பொருளாதார மற்றும் உடல் ரீதியான புனர்வாழ்வுக்காக செயற்படும் அமைப்புமான பகவான் மகாவீர் விக்லங் சகாயதா சமிதியால் நடத்தப்படுகின்றது. ஜெய்ப்பூரைத் தளமாகக் கொண்டியங்கும் இந்த அரச சார்பற்ற நிறுவனம் 1975ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் செயற்கை கால்களை பொருத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உதவிகளை விசேட தேவையுடையோருக்கு வழங்கிவரும் உலகின் பாரிய அமைப்பாகவும் உள்ளது.

2010 மார்ச், ஏப்ரல் காலப்பகுதியில் வவுனியாவிலும், 2011செப்டெம்பரில் யாழ்ப்பாணத்திலும் பகவான் மகாவீர் விக்லங் சகாயதா சமிதி அமைப்பானது இரண்டு முகாம்களை நடத்தியிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்டப்பட வேண்டிய விடயமாகும். இம்முகாம் மூலம் 2500க்கும் அதிகமானோர் நன்மை அடைந்திருந்த அதேவேளை, 1600 பேர் ஜெய்ப்பூர் செயற்கை கால்களை பெற்றிருந்தார்கள்.

இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகளைக் குறிக்கும் அசாதி கா அம்ரித் மகோற்சவ்வை முன்னிட்டு ஒரு வார கால கொண்டாட்டங்கள், 73ஆவது குடியரசு தினமான கடந்த ஜனவரி 26ஆம் திகதி ஆரம்பித்திருக்கும் நிலையில், அதன் ஒரு பகுதியாகவே இலங்கையில் செயற்கை கால்களை பொருத்தும் முகாமின் ஆரம்ப நிகழ்வுகள் அமைந்துள்ளன. அத்துடன் இந்தியாவின் பௌத்த மரபுகள் குறித்த கண்காட்சி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தில் குருதேவ் இரவீந்திரநாத் தாகூரின் சிலையைத் திறந்து வைத்தல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இக்கொண்டாட்டங்களில் உள்ளடங்குகின்றன. இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் அதேநேரம், இலங்கை மக்களின் வாழ்வில் வெளிப்படையான தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையிலான இலங்கையுடனான அபிவிருத்தி பங்குடைமையில் இந்திய அரசாங்கத்தின் வழிகாட்டல் தத்துவத்தினை இந்த செயற்கைக்கால் முகாம் சான்றுபகர்கின்றன.

# திருநெல்வேலி சந்தையில் திருடிய நபர் கைது

(யாழ். நிருபர்)

திருநெல்வேலி சந்தையில் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களிடம் திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி சந்தையில் வகுப்பு (மூடை தூக்குதல்) வேலை செய்து வரும் நபர் ஒருவர், வியாபாரிகள், நுகர்வோர்களிடம் மூடைகளை தூக்கி வருவதாக கூறி மூடைகளை தூக்கிச் செல்லும் போது, அவற்றிலிருந்து பொருட்களை திருடுதல், அதிக பணத்தினை மிரட்டி பெறுதல், மூடைகளை வாகனத்தில் ஏற்றிவிடுவதாக கூறி மூடைகளை தூக்கிக்கொண்டு தலைமறைவாதல் போன்ற செயல்களில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையிடமும் கோப்பாய் பொலிஸாரிடமும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியான முறைப்பாடுகளை செய்து வந்திருந்தனர். இந்நிலையில் நேற்று காலை கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த நபர் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து அந்நபரினை கைது செய்துள்ளார். கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வாரியபொல தென்னை நார் தொழிற்சாலையில் தீப்பரவல்







வாரியபொல தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் (03) மாலை ஏற்பட்ட தீயின் காரணமாக, அந்த தொழிற்சாலை முழுமையாக தீயினால் சேதமடைந்துள்ளது.

வாரியபொல, மலவான பிரதேசத்தில் இந்த தொழிற்சாலை அமைந்துள்ளது. குருநாகல் மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்புப் பிரிவினர், வாரியபொல பிரதேச சபையின் தண்ணீர் பவுசர் உள்ளிட்ட பிரிவினரினூடாக தீயணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் மாலை 5.00 மணியளவில் தீப் பரவலை முழுமையாக கட்டுப்பட்டுத்த முடியாமல் போயுள்ளது.

வாரியபொல இராணுவ முகாமின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டுள்ளனர். தீக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் வட்டக்கண்டல் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் முஹம்மது யஹ்யா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜமால்தீன் ஜௌசி, வண்ணாத்தவில்லு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பிரபாகரன், வண்ணாத்திவில்லு பிரதேச சபை உறுப்பினர்களான முஹம்மது சமான், முஹம்மது அனஸ்தீன், வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் முஹம்மது ரிஸ்வான் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புத்தளத்தில் இயங்கி வரும் BCMH அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் புத்தளம் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு



கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுவரும் நிலையில், இந்த வருடமும் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், புத்தளம் வட்டக்கண்டல் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

# வவுனியாவில் இடம்பெற்ற 74ஆவது சுதந்திர தினம்







(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று (04) காலை வவுனியா நகரசபை மைதானத்தில் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றது.

அதிதியாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நகரசபை மைதானத்தில் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் வரவேற்கப்பட்டதுடன், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனால் தேசிய கொடி ஏற்றப்பட்டது. இதன்போது தமிழ், சிங்கள மொழிகளில் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

இராணுவத்தினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர், மாணவர்கள் ஆகியோரின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றதுடன், தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலாசார நடனமும் இடம்பெற்றது.

இதன்போது சுதந்திர தினத்தை முன்னிட்டு நகரசபை மைதானத்தில் அதிதிகளால் மர நடுகையும் இடம்பெற்றது.

நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவி மாவட்ட செயலாளர் திருமதி மு.சபர்ஜா, திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.


திகதி 03.02.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4667
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,668,930.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 0 5 2 3 3 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,970,098.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2962
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,218,020.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 13 17 63 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,726,670.00

Mega POWER கோடி 10 மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1015
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 11942
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,916,520.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 210,614,646.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 23 52 54 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 697
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,034,800.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 13 17 21 35
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,428,491.60

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0008
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,897,460.00
இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 06 41 49 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,557,364.40

சேவன
சீட்டிழுப்பு இலக்கம் :353
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,356,240.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 06 13 42 83
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,290,157.60

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.U.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் ஆர்ப்பாட்டம்




(யாழ் நிருபர்)

இலங்கை சுதந்திர தினமான நேற்று கரிநாளாக பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகளை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு போன்றவற்றை வலியுறுத்தி இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியவாறு யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் பகுதிவரை பேரணியாகச் சென்று அங்கும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமானப்படையினருக்கு பதவி உயர்வு

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விமானப்படையில் நுற்றுக்கும் அதிகமான அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக, விமானப்படையின் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்தது.

அதற்கமைய விமானப்படையில் 175 அதிகாரிகளுக்கும் 2ஆயிரத்து 338 இதர நிலை அங்கத்தவர்களுக்கு இந்த பதவி உயர்வை வழங்க விமானப்படைத் தளபதி எயார் மார்சல் சுதர்ஷன பத்திரணவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# 480 இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 8 ஆயிரம் சிப்பாய்களுக்கு பதவி உயர்வு



இராணுவத்தினரின் அர்ப்பணிப்பு சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் தேசத்தின் 74ஆவது தேசிய சுதந்திர தினத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அனுமதியுடன் , 480 அதிகாரிகள் மற்றும் 8034 சிப்பாய்களுக்கான பதவிநிலை உயர்வுகள் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, 7 சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 16 கேர்ணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 36 லெப்டினன் கேர்ணல்கள் கேர்ணல் நிலைக்கும், 50 மேஜர்கள் லெப்டினன் கேர்ணல் நிலைக்கும் 207 கெப்டன்கள் மேஜர் நிலைக்கும், 94 லெப்டினன்கள் கெப்டன் நிலைக்கும், 70 இராண்டாம் லெப்டினன்கள் லெப்டினன் நிலைக்கும் நிலை உயர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலை இந்த பதவி உயர்வுகள் நேற்று (04 ) வழங்கப்பட்டன.

இதேவேளை, தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு மேஜர் ஜெனரல் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ள இராணுவத்தின் மேலும் ஏழு சிரேஷ்ட பிரிகேடியர்கள் நேற்று முன்தினம் (3) இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவை சந்தித்து பதவிச் சின்னங்களையும், தளபதியின் வாழ்த்துகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

# கொழும்பு லயன்ஸ் கிளப் 14ஆவது வருடாந்த கூட்டம்



கொழும்பு லயன்ஸ் கிளப் ஓப்கோல் சிட்டியின் 14ஆவது வருடாந்த கூட்டம் சென் மைக்கல் வீதி, கொழும்பு -03, கொள்ளுப்பிட்டி கோல்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ரீஜன் (Region) செயற்பாட்டளர் லயன், கமால் சில்வா (Zone ) லயன், நினேஸ் அமிர்தய்யா ஆகியோருடன் கழகத் தலைவர் லயன் சொ.செந்தில் குமார், செயலாளர் லயன் மனோகரன், பொருளாளர் லயன் சதாசிவம், செயற்பட்டாளர் லயன் பொன். பத்மநாதன், லயன் கார்த்திகேசு , உறுப்பினர்களான லயன் சிவகுருநாதன், லயன் பாலசிறிதரன், லயன் தேவராசன், லயன்,சிவகுமார் (சுசி) லயன் ஆனந்தராஜ், லயன் லோகவர்தனன் லயன் உதயவர்தனன், லயன் விஜயகுமார், லயன் ராஜேந்திரன் மற்றும் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்

# பிரபல ஒலிபரப்பாளர் சனூஸ் காலமானார்



(மாவடிப்பள்ளி நிருபர்)

பிரபல ஒலிபரப்பாளர் சனூஸ் முஹம்மட் பெரோஸ் நேற்று முன்தினம் காலமானார். பேருவளை மருதானையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தமிழ்ச் சேவையின் பகுதிநேர அறிவிப்பாளராக இணைந்து கட்டுப்பாட்டாளர் பதவிவரை வகித்தவர். இறுதிக்காலத்தில் முஸ்லிம் சேவையின் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தில் தமிழ் செய்தி அறிவிப்பாளராகவும் பணியாற்றினார். சிறந்த செய்தி அறிவிப்பாளருக்கான ஜனாதிபதி விருதை இவர் இரண்டு முறை வென்றுள்ளார். பல்வேறு நாடகங்களிலும் பங்குகொண்டு கலைத்துறையிலும் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தி பிரகாசித்தவர்.

அண்மைக்காலமாக திடீர் சுகவீனம் ஏற்பட்டு நீண்டநாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு காலமானார்.

# வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைமையகத்தில் இடம்பெற்ற 74ஆவது சுதந்திர தின நிகழ்வு



(இக்பால் அலி)

74ஆவது தேசிய சுதந்திர தின விழா அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைமையகத்தில் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

தேசிய விடுதலைக்காக பெரும்பங்காற்றிய தேசிய வீரர்களுக்காகவும் நாட்டின் சுவிட்சத்திற் காகவும் விசேடதுஆப் பிரார்த்தனை சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.

கொரோனா சுகாதார வழிமுறைகளுக்கு இணங்க தேசிய கொடி ஏற்றப்பட்டு சம்பிரதாய முறைப்படி நிகழ்வுகள் இடம்பெற்றன. குறித்த எண்ணிக்கையிலானவர்கள் கலந்துகொண்டனர்.

# நாட்டை கட்டியெழுப்ப சுதந்திர போராட்டங்கள் அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



நாட்டை படுகுழியிலிருந்து மீட்டெடுக்க மேலும் பல சுதந்திர போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மனசாட்சியோடு கேட்பதற்கு பல கேள்விகள் உள்ளன எனவும், அன்று நாம் பெற்ற சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க முடிந்ததா எனவும் வினவிப் பார்க்கவேண்டியுள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நேற்று (04) கொள்ளுப்பிட்டி, பொல்வத்தை ஸ்ரீ தர்மகீர்த்தியாராமயவிற்கு வருகைதந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, விகாரையின் பிரதம தேரர், ஸ்ரீலங்கா ராமன்ய மஹாநிக்காய பீடாதிபதி அக்கமஹாபண்டித திரிபிடக மகுலேவே ஸ்ரீ விமலாபிநந்தன தேரரின் வழிகாட்டலின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட 74ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் காலனித்துவ நாட்டின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த மகத்தான தேசிய மாவீரர்களின் நினைவாக டி.எஸ்.சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

"நாம் இழந்த மற்றும் எங்களுக்கு இல்லாமல் ஆக்கப்பட்ட சுதந்திரத்தை மீளப் பெற மீண்டும் மீண்டும் போராட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பொதுவாக நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறுகிய மனப்பான்மையின்றி மீள் பரிசீலிக்க வேண்டும்'' எனவும் அவர் தெரிவித்தார்.

# உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கு விசேட வழிகாட்டல்கள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கொவிட்-19 தொற்றுக்குள்ளான அல்லது தனிமைப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்குத் தோற்றும் இவர்களுக்கான பரீட்சை நிலையங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை பரீட்சை ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ. தர்மசேன அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில், பரீட்சார்த்தி ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் அதனை உறுதிப்படுத்தவேண்டும். அதேபோன்று அவ்வாறு தொற்றுக்குள்ளான பரீட்சார்த்திகள் சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கமைய பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள விசேட பரீட்சை நிலையம், தமது மாவட்டத்திலுள்ள தமக்குரிய விசேட பரீட்சை நிலையம் அல்லது வேறு மாவட்டத்திலுள்ள விசேட பரீட்சை நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

மேலதிக தவல்களை தமது பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகள், பாடசாலை பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை அழைப்பு இலக்கங்களான 011 2784208, 0112784537 அல்லது 0112785212 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பு விடுத்து பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது 1911 என்ற துரித அழைப்புக்கோ அல்லது 0112784422 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# புத்தளத்தில் விசேட சுதந்திர தின நிகழ்வு



(ரஸீன் ரஸ்மின்)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கணமூலை தெற்கு கிராமத்தில் இன்றைய தினம் காலை சுதந்திர தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

கிராம உத்தியோகத்தர் எஸ்.ஏ.ஏ.முஹைதீன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் டபிள்யூ. எம்.எம். வசந்தி பெர்னாண்டோ, முன்னாள் அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் இணைப்புச் செயலாளரும், ஸ்ரீ.பொ.ஜ. பெரமுன கணமூலை அமைப்பாளருமான அலாவுதீன் அஸ்ரின் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் அலுவலக வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

கணமூலை, லதீப் மாவத்தை மற்றும் மிஹ்ராஜ் புரம் ஆகிய சமுர்த்தி சங்கங்களின் உறுப்பினர்கள் இந்த சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

அத்துடன், சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டி விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றதுடன், மிஹ்ராஜ்புரம் பிரதான வீதியில் பயன்தரும் மரக்கன்றுகளும் இதன்போது நடப்பட்டன.

இதேவேளை, முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகாவின் ஆலோசனையில் பிரதேச செயலகத்திற்குற்பட்ட சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்துடனான பங்களிப்பை மேம்படுத்த இலங்கை உறுதி

தாய்லாந்து இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவர் மற்றும் யுனெஸ்கெப்பின் நிரந்தர பிரதிநிதி சி.ஏ.சமிந்த, ஐ. கொலொன்ன ஆகியோர் தலைமையில் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி கலப்பு முறையில் தாய்லாந்தின் ஆசிய தொழில்நுட்பக் கழகத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டம் இடம்பெற்றது. ஆசிய தொழில்நுட்பக் கழகத்தின் மாணவர் உறவுக் குழுவின் இணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் கலாநிதி டோங்சாட் ஹொங்லடரோம்ப் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ஆசிய தொழில்நுட்பக் கழகத்தின் தலைவர் கலாநிதி ஈடன் வை. வூன், முன்னாள் துணைப் பிரதமரும் தாய்லாந்தின் முன்னாள் கல்வி அமைச்சரும், சபையின் துணைத் தலைவர்களில் ஒருவருமான கலாநிதி சுவிட் குங்கிட்டி, சபையின் ஏனைய உறுப்பினர்கள், தாய்லாந்து வெளிநாட்டு அமைச்சின் பிரதி நிரந்தர செயலாளர் சுடின்டோர்ன் கோங்சாக்டி, பங்களாதேஷ், கனடா, பிரான்ஸ், இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பேங்கொக்கிலுள்ள கம்போடியா, லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு, மலேசியா, நேபாளம், வியட்நாம் ஆகிய நாடுகளின் தூதரகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

2022ஆம் ஆண்டிற்கான திட்டங்களை விரிவுபடுத்தும் கல்வித் திட்டங்கள் மற்றும் கற்பித்தல், ஆராய்ச்சி, வெளியடைவு, பூகோள வலையமைப்பு, புதிய பல்கலைக்கழகக் கூட்டாண்மைகள், ஆசிய தொழில்நுட்ப நிலையத் திட்டம், ஆசிய தொழில்நுட்ப வியூகப் பணிக்குழு போன்றவற்றை சபை விவரித்தது.

கொவிட்-19 தொற்றினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும்போது, ஆசிய தொழில்நுட்பக் கழகத்தின் இலக்குகளை அடைவதற்கான மகத்தான முயற்சிகளுக்காக இணையவழியில் இணைந்த தூதுவர் கொலொன்ன ஆசிய தொழில்நுட்பக் கழகத்தின் தலைவர் கலாநிதி ஈடன் வை. வூனுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார். தாய்லாந்தின் ஆசிய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அரச திறன் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இறுதிசெய்வதற்காக சமீபத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள், இலங்கையில் திறன் அபிவிருத்தித்துறையில் சாத்தியமான பங்காளித்துவங்கள் பற்றிய இலங்கையின் தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆசிய தொழில்நுட்ப நிறுவனம் தாய்லாந்து மற்றும் இலங்கையில் உள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றுக்கு இடையே திறன் அபிவிருத்திக் கூட்டாண்மைத் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவற்றை தூதுவர் கொலொன்ன எடுத்துரைத்தார்.

இலங்கை 1977ஆம் ஆண்டுமுதல் ஆசிய தொழில்நுட்ப நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கையிலுள்ள ஆசிய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையில் நீண்டகால பங்காளித்துவங்கள் மற்றும் ஒத்துழைப்புகளால் பயனடைந்துள்ளன.

# இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் அனுஷ்டிப்பு

(ரவ்பீக் பாயிஸ்)

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இலங்கைத் தமிழர்களுக்கு இன்றைய நாள் (நேற்று) ஒரு கறுப்பு நாள் எனவும் அரசாங்கம் இனிமேல் மரணச் சான்றிதழ் வழங்குவோம் என்ற வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்துவதை முற்றாக தவிர்க்க வேண்டும் எனவும் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை அன்புவெளிபுரம் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் தலைவி ஜே.நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் (04) நாட்டின் 74ஆவது சுதந்திர தினத்தை வெகு விமரிசையாக கொண்டாடிக்கொண்டிருக்கும் இன்றைய நாள் (04) தமிழர்களுக்கான கறுப்பு நாள். இத்தனை வருடங்கள் கடந்தும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தரவுகள் சரியாக வழங்கப்படாமையினையிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோர்களின் உறவினர்கள் என்றவகையில் இந்த நாட்டில் எமக்கு எந்தவொரு சுதந்திரமும் இல்லை.

நாங்கள் இன்றுவரை நிம்மதியாக இந்த நாட்டில் வாழவில்லை. அரசாங்கத்தின் அழுத்தங்களின் காரணமாக அரச புலனாய்வுத்துறையினரின் பல கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டு, பின்தொடரப்பட்டு மற்றும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகிள்றோம். இன்றைய நாள் இலங்கைவாழ் தமிழர்களின் கறுப்பு நாள்.





மேலும், நாட்டின் ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல் தலைமைகளும் அரச அதிகாரிகளும் இவ்வாறு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் எந்தவொரு தீர்க்கமான கருத்துகளும் தெரிவிக்காத நிலையில், ஆண்டுதோறும் தரவுகள் மாத்திரம் பெற்றவண்ணம் இருக்கின்றார்கள். அவ்வாறு பெறப்பட்ட தரவுகளுக்கு இதுவரை எந்தவொரு தீர்வும் கிட்டாத நிலையில் நீதியமைச்சர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டு, அங்கு ஊடகங்களுக்கு காணாமலாக்கப்பட்டோருக்கான மரணச் சான்றிதழ்கள் வழங்குவதாக தெரிவித்த விடயத்தை இன்றைய (04) சுதந்திர தினத்தில் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நமது உறவுகளுக்கு நீதி விசாரணை இல்லாமல் எவ்வாறு மரணச் சான்றிதழ் வழங்கமுடியும்? எமக்கு மரணச் சான்றிதழ் தேவையில்லை. அவர்களுக்கான சரியான ஒரு நீதி மாத்திரமே வேண்டும்.

ஜனாதிபதி கூறிய அதே வார்த்தையை மனப்பாடம் செய்துகொண்டு நீதியமைச்சர் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்ற விடயத்தை கூறுவதை விட்டுவிட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் சரியான ஆய்வுகளை மேற்கொண்டு எமக்கு சரியான நீதியை பெற்றுத்தர வேண்டுமென நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். நீதியமைச்சரின் குடும்பத்தினரோ அல்லது உறவினர்களோ இவ்வாறு கடத்தப்பட்டு அவர்களுக்கு நீதி கிடைக்காத பட்சத்தில் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றால் அவர் ஏற்றுக்கொள்வாரா? என்றும் இதன்போது கேள்வி எழுப்பினார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரது மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்ற வார்த்தையை இனிமேல் இந்த அரசாங்கம் பிரயோகிக்கக்கூடாது எனவும் அதனை வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கம் என்ற வகையில் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் இதன்போது தெரிவித்தார்.

அன்று 1948ஆம் ஆண்டு வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்த நாட்டில் இன்று இங்கு வாழும் மக்களுக்கு எந்தவொரு சுதந்திரமும் கிடைக்கவில்லை. நாட்டில் எமக்கு நடந்த அநீதிகளுக்கு ஜனநாயக முறையில் நீதி கேட்பது, பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் செயற்பாட்டு சுதந்திரமும் இல்லை. இவ்வாறிருக்கையில், நாம் எவ்வாறு இன்றைய சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது? நாட்டு மக்கள் என்றவகையில் இவ்வாறான அநீதிகள் இழைக்கப்படாமல் இருந்தால் நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றாக இந்த சுதந்திர தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடியிருக்கலாம் என திருகோணமலை தமிழர் சமூகத்தின் இணைப்பாளர் ஆர்.நிக்லஸ் தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் அவர்களின் உறவுகளின் புகைப் படத்தினை தமது கைகளில் தாங்கியவாறு அமர்ந்து அமைதியான முறையில் தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து பொதுமன்னிப்பில் கைதி ஒருவர் விடுதலை

(கந்தளாய் நிருபர)

நாட்டின் 74ஆவது சுதந்திர தினத்தை திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதியொருவர் விடுதலைசெய்யப்பட்டுளார். சிறுகுற்றம் புரிந்த கைதி ஒருவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


74ஆவது சுதந்திர தினத்தையடுத்து ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் நாடுபூராகவும் 197 சிறைக்கைதிகள் நேற்று (04) விடுதலைசெய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகியகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலைசெய்யப்பட்டனர்.

அவர்கள் செலுத்தவேண்டிய அபராதங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளதுடன், 65 வயதிற்கு மேற்பட்ட கைதிகளில் தண்டனைக் காலத்தில் பாதியை நிறைவு செய்தவர்களும், 50 வயதுக்கு மேற்பட்ட கைதிகளில் 25 வருடங்களுக்கு மேலாக சிறையில் இருப்பவர்களும், சிறு குற்றங்களுக்காக கைதாகி தண்டனையின் பாதியை நிறைவுசெய்த கைதிகளுமே இவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து கொழும்பைச் சேர்ந்த 29 வயதுடைய கைதி ஒருவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளார்.

# மட்டு. திராய்மடு பகுதியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு முருகன் கோவிலுக்கு அருகாமையில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (04) காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேற்று காலை 6 மணியளவில் சென்று உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டுள்ளதுடன், அவரது மோட்டார்சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

குறித்த நபர் அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒவ்வொரு குடிமகனும் உரிமைகளுடன் சமத்துவமாக வாழும்போதே சுதந்திர தினம் அர்த்தமுள்ளதாக அமையும்

## கல்முனை மாநகர முதல்வர் றகீப் தெரிவிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

ஒவ்வொரு குடிமகனும் அனைத்து உரிமைகளுடனும் சமத்துவமாக வாழும்போதே சுதந்திர தின விழா அர்த்தமுள்ளதாக அமையும் - எனக் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபை ஒழுங்குசெய்திருந்த 74ஆவது தேசிய சுதந்திர தின விழாவில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதல்வர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டில் சிறுபான்மையினர் மீதான பாரபட்சங்களும் நெருக்குவாரங்களும் அதிகரித்திருக்கின்ற சூழ்நிலையில், சுதந்திர தினத்தை தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் கொண்டாடத்தான் வேண்டுமா என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். உண்மையில் நாம் கொண்டாடுவது ஒரு தரப்பினருக்கு மட்டுமான சுதந்திர விழாவல்ல. இது நாம் பிறந்து, வளர்ந்து, பூர்வீகமாக குடியிருக்கின்ற எமது தாய் நாட்டுக்கான சுதந்திர விழாவாகும். இலங்கைத் திருநாடானது சிறுபான்மையினராகிய எமக்கும் சொந்தமான தேசமாகும்.

காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து எமது நாடு சுதந்திரம் பெறுவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் ஒன்றிணைந்தே போராடினார்கள். அதுவே நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தது.

எனினும், இலங்கை சுதந்திரம் பெற்ற




காலம் தொடக்கம் மாறி மாறி ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் சமூகத்தினரை இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்துவதிலும் எங்களது உரிமைகளையும் அபிலாஷைகளையும் மழுங்கடிப்பதிலும் சிறுபான்மையின மக்களை அடக்கி, ஒடுக்கி ஆள்வதிலும் முனைப்புக்காட்டியே வந்திருக்கின்றன.

இந்த நீண்ட - நெடிய பின்னணியிலேயே இன்றும் சிறுபான்மைச் சமூகங்கள் மீதான பாரபட்சங்கள் தொடர்கின்றன. சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைகள் இன்று வெவ்வேறு வடிவங்களில் விஸ்வரூபம் பெற்றிருக்கின்றன. அதற்காக தேசத்தின் சுதந்திரத்தை எம்மால் ஒருபோதும் புறந்தள்ளி விட முடியாது.

நாட்டின் சுதந்திரம் என்பது நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனினதும் சுதந்திரம் என்பதை நாங்கள் உணரவேண்டும். தேசத்திற்கு மதிப்பளிப்பதும் கௌரவிப்பதும் தேச நலன்களில் கரிசனை செலுத்துவதும் நாட்டுப் பிரஜைகள் அனைவரினதும் கடமையாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டதே தேசப்பற்றாகும். தேசிய கொடியின் கீழ் ஒன்றிணைவதன் மூலமே இதனை நாங்கள் வெளிப்படுத்த முடியும்.

எவ்வாறாயினும், நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் எப்போது அவரவர் சமய, கலாசாரங்களுடன் அனைத்து உரிமைகளையும் பெற்று சமத்துவமாக வாழக் கிடைக்கிறதோ அன்றுதான் எமது நாட்டின் சுதந்திரம் என்பது அர்த்தமுள்ளதாக மாறும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் ஆணித்தரமாக கூறிவைக்க விரும்புகின்றேன்.

சிறுபான்மைச் சமூகத்தினர் செறிந்து வாழ்கின்ற கல்முனை மண்ணில் இடம்பெறு கின்ற இந்த விழா இதற்குக் கட்டியம் கூறவேண்டும். இது அரசாங்கத்திற்கும் பெரும்பான்மையின மக்களுக்கும் நல்ல செய்தியைக் கொண்டுசெல்ல வேண்டும்.

இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான ஒரு பூமியாக நமது கல்முனை மண் திகழ வேண்டும். ஏனைய பிரதேசங்களுக்கும் முழு நாட்டுக்கும் முன்னுதாரணமிக்கதாக நமது கல்முனை மாநகரம் மாறவேண்டும். அந்த வகையில் கல்முனை மாநகர சபையின் ஆட்சி நிர்வாகமானது ஒற்றுமைக்கு முன்மாதிரியான ஒரு தளமாக எம்மால் முன்கொண்டு செல்லப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# இஸ்லாமிய சமயக் கல்வியில் அரசாங்கம் தலையிடுகிறது

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடும் விசனம்

அரசாங்கம் சிலரைக்கொண்டு ஆணைக் குழுக்களை அமைத்துக்கொண்டு, இஸ்லாமிய சமயக்கல்வி விவகாரத்தில் இப்பொழுது தலையிட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விசனம் தெரிவித்தார்.

அண்மையில் ஓட்டமாவடியில் நடைபெற்ற முன்பள்ளி பாடசாலையொன்றின் ஏழாம் ஆண்டு நிறைவு கலை நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மீராவோடை, பத்ரியாநகர், அல்-மினா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற எக்ஸிம் முன்பள்ளியின் பிரஸ்தாப நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது,

நடந்த புலமைப்பரிசில் பரீட்சை பற்றி இங்கு வந்திருக்கின்ற அதிபரோடு கதைத்துக் கொண்டிருந்தேன். நாட்டில் பெற்றோர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருப்பதை தொலைக்காட்சியில் பார்த்தேன். இதன் பின்னணி என்னவென பார்த்தபோது பரீட்சை வினாத்தாளை சற்று காலதாமதமாக வழங்கிவிட்டு முழுமையாக விடைகளை எழுதி முடிப்பதற்குள் குறிப்பிட்ட நேர எல்லைக்குள் விடைத்தாள்கள் பெறப்பட்டதாக புகார் செய்யப்படுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, வேறேதும் பிரச்சினைகள் இருக்கின்றனவா எனக் கேட்டபோது அவர் முதலாம் பகுதி வினாத்தாள் மிகவும் கடினமாக




இருந்ததாகவும், கேள்விகள் சில கிட்டத்தட்ட 10 வரிகள் வரையில் கேட்கப்பட்டிருந்ததாகவும் வினாக்களை வாசித்து விளங்கிக்கொள்வதற்கு நேரம் எடுத்ததாகவும் கூறினார். வினாத்தாள்களை தயாரிக்கின்றபோது உளவியல் ரீதியான பார்வையும், தெளிவும் இல்லாமையினாலேயே இவ்வாறான குளறுபடிகள் ஏற்படுகின்றன. வேண்டுமென்றால் வெட்டுப்புள்ளியைக் குறைத்துக் கொடுப்பார்கள்.

ஆனாலும், பிள்ளைகளுக்கு கொடுக்கப்படுகின்ற மனஅழுத்தம் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. பாடவிதானங்களை தயாரிக்கின்றபோது இருக்கவேண்டிய விஞ்ஞான ரீதியான அணுகுமுறையைப் பொறுத்தமட்டில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தேர்ச்சி இல்லாமையைக் காண்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் நடக்கின்ற கல்வி அமைச்சு சம்பந்தமான கலந்துரையாடல்களின்போது பாடவிதானங்களை தயாரிப்பதில் நிறைய நிபுணர்கள் வந்து விளக்கமளிக்கின்றபோது சில பாடவிதானங்களின் குறைபாடுகளையும், அவற்றினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் முன்வைக்கின்றனர்.

இப்போது அரசாங்கம் சிலரைக்கொண்டு ஆணைக்குழுக்களை நியமித்து முஸ்லிம்களின் சமயக்கல்வி விவகாரத்தில் மூக்கை நுழைத்துக் கொண்டிருக்கின்றது.

இப்போது நாடு முழுவதிலும் இஸ்லாம் பாட புத்தகங்களை மீளப் பெறப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி வெளிவந்திருந்ததைக் கண்டேன். இவ்விடயம் தொடர்பில் நான் தேசிய கல்வி நிறுவகத்திலும், பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்திலும் கடமையாற்றும் சிலருடன் கதைத்தேன்.

ஊர் ஊராகச் செல்லும் செயலணியின் “ஞானம்” உள்ள தலைவர் எல்லா இடத்திலும் கூட்டங்களைக் கூட்டி, முஸ்லிம்கள் மத்தியில் பயங்கரவாதத்திற்கு மூலகாரணமாக அமைவது இஸ்லாமிய பாட நூல்கள் என அறிவுறுத்துகின்றார். இஸ்லாம் பாடம் படிப்பிக்கின்றபோது கலிமாவைக் கூறக்கூடாது என்கிறார். ஏனென்றால், “அல்லாஹ்வை தவிர வேறு இறைவன் இல்லை” என்பது மற்ற மதங்களுடன் பிரச்சினைகளை உருவாக்கும் என அச்சுறுத்துகின்றார். அவர்களது அறிவு மட்டம் அவ்வளவுதான். அதற்கு எங்களில் சிலரும் கூட்டுச் சேர்ந்துக்கொள்கின்றனர். அவரால் முன்வைக்கப்படுகின்ற கருத்துகள் சமூகங்களுக்கு மத்தியில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்திவருகின்றன.

தேசிய கல்வி நிறுவகத்தில் “ஆசிரியர் கையேடு” புத்தகத்தை மாற்றிமைக்க வேண்டும் எனக்கூறி, ஹிஜ்ரத் சென்றது பற்றியும், மதீனாவில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆட்சியமைத்தது பற்றியும் பேசக்கூடாது என்கின்றனர்.

ஏனென்றால், இந்த விடயம் இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு தனியான ஆட்சி வேண்டும் என கேட்க வழியை ஏற்படுத்திவிடுமாம். என்ன முட்டாள்தனம்? இவ்வாறான கூட்டத்தை வைத்துக்கொண்டுதான் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை அமைத்து இந்நாட்டு முஸ்லிம்களின் விவகாரத்தில் தலையிடுகின்றார். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சுடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

சமூகமே முன்வந்து ஜம்இய்யத்துல் உலமாவுடன் சேர்ந்து பிரச்சினைகள் ஏதும் இருப்பின் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் “ரித்தத்” சம்பந்தமாக சில விடயங்களை தீர்க்கவேண்டும் என நினைத்தேன். நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு காரணமாக அவ்வாறானவற்றை மிகைப்படுத்திக் காண்பிப்பதற்கு எத்தனிக்கின்றனர்.

இன்று பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகமே அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்துகின்றது. அதில் இருந்து விடுபடுவதற்காகவே எமது சமூகத்தின்மேல் இவற்றைத் திணிக்கின்றனர். இவ்வாறான செயல்களின் விளைவு இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக எழக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது - என்றார்.

# காத்தான்குடி நகரில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை




(காத்தான்குடி நிருபர்)

இராணுவத்தின் விசேட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் (03) காலை தொடக்கம் வெள்ளிக்கிழமை (04) மாலை வரை இரு தினங்களில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

கொரோனா தொற்று அபாயத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் இவ்விசேட திட்டத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது தடுப்பூசி வழங்கப்பட்டு வருவதோடு, அதிகமான மக்கள் இத்திட்டத்தின் மூலம் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் 74ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம்


ஆலையடிவேம்பு...



அக்கரைப்பற்று வைத்தியசாலை...


அட்டாளைசேனை..


திருகோணமலை...


காரைதீவு...



கல்முனை பிரதேச சபை...



காத்தான்குடி...


கிண்ணியா...


மண்முனை மேற்கு...


மூதூர்...


நற்பிட்டிமுனை...


ஓட்டமாவடி...


பொத்துவில் வைத்தியசாலை...


சம்மாந்துறை...


தம்பலகாமம்...


மட்டக்களப்பு பிரதேச சபை


மட்டக்களப்பு முகம்மதியா வித்தியாலயம்


வாழைச்சேனை ஆயிஷா பாடசாலை ...



காத்தான்குடி
பத்ரிய்யஹ் ஜும்ஆ
பள்ளிவாசல்



கல்முனை மாநகர சபை...

# வீட்டைச் சுற்றி அமெரிக்கப் படைகள்; மனித வெடிகுண்டாக மாறிய ஐ.எஸ். தலைவர்





## திக் திக் நிமிடங்களுடன் மரணித்ததன் பின்னணி




சிரியாவில் அமெரிக்க சிறப்புப் படையினர் நள்ளிரவில் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹஷிமி அல்-குரேஷி பலியானார்.

அமெரிக்காவின் சிறப்பு அதிரடிப் படையினர், வடமேற்கு சிரியாவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது, தங்களது வீட்டை அமெரிக்கப் படைகள் சுற்றிவளைத்ததை அறிந்துகொண்ட ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹஷிமி அல்-குரேஷி, தன்னைத்தானே மனித வெடிகுண்டாக மாற்றி, வெடிகுண்டை வெடிக்கச் செய்து, தனது குடும்பத்தினரையும் கொன்று, தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்,

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹஷிமியை குறிவைத்து சிரியாவின் வடமேற்கே அமைந்துள்ள இத்லிப் மாகாணத்தில் அமெரிக்க சிறப்புப் படையினர் புதன்கிழமை நள்ளிரவில் அதிரடித் தாக்குதல் நடத்தினர். இந்த நடவடிக்கையில் அவர் உயிரிழந்தார் என்று அறிவித்தார்.

அமெரிக்கப் படையினரின் தாக்குதல் நடவடிக்கையின்போது ஐ.எஸ். அமைப்பின் முன்னாள் தலைவர் அபூபக்கர் அல்-பாக்தாதியை போலவே அபு இப்ராஹிம் அல்-ஹஷிமியும் வெடிகுண்டை வெடிக்கச் செய்து பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினரைக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தில் 6 சிறுவர்கள், 4 பெண்கள் உட்பட 13 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




இந்த மனித வெடிகுண்டுத் தாக்குதலில், அவர்கள் தங்கியிருந்த வீட்டின் மேல்தளம் முற்றிலும் சேதமடைந்துள்ளது. அந்த வீட்டின் மீதமிருக்கும் சுவர்களில் இரத்தக்கறைகள் தென்படுகின்றன. 13 பேர் கொல்லப்பட்ட அந்த படுக்கையறையில் குழந்தைகளை படுக்கவைக்கும் மரத் தொட்டில், பஞ்சு அடைக்கப்பட்ட முயல் பொம்மை இருந்துள்ளது. மற்றொரு பக்கம், குழந்தைகள் விளையாடும் ஊஞ்சல் தொங்கிக்கொண்டிருந்ததாக தகவல்கள் பதிவாகியுள்ளன.

சிரியாவிலும், ஈராக்கிலும் கடந்த 2014ஆம் ஆண்டில் அதிரடியாக முன்னேறி கணிசமான பகுதிகளைக் கைப்பற்றிய ஐ.எஸ். பயங்கரவாதிகள், அங்கு இஸ்லாமிய பேரரசை அமைப்பதாக அறிவித்தனர்.

ஈராக்கின் மொசூல் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் சிஞ்சார் மலைப் பகுதியிலும் அவர்கள் படையினரையும் பொதுமக்களையும் கொடூரமாக கொலை செய்தது உலகம் முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து சிரியாவிலும், ஈராக்கிலும் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. அமெரிக்காவின் உதவியுடன் மிகுந்த போராட்டத்துக்குப் பிறகு ஐ.எஸ். பயங்கரவாதிகளிடமிருந்த பகுதிகளை ஈராக் படையினர் மீட்டனர்.

சிரியாவிலும் ரஷ்ய உதவியுடன் அந்த நாட்டுப் படையினர் ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்டியடித்தனர்.



இதற்கிடையே, ஐ.எஸ். அமைப்பை உருவாக்கிய அபூபக்கர் அல்-பாக்தாதியை சிரியாவின் இத்லிப் மாகாணத்தில் அமெரிக்கப் படையினர் கடந்த 2019ஆம் ஆண்டு சுற்றிவளைத்தபோது, அவர் குடும்பத்தினருடன் தற்கொலை செய்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து, அந்த பயங்கரவாத அமைப்பின் தலைவராக அபு இப்ராஹிம் அல்-ஹஷிமி அல்-குரேஷி பொறுப்பேற்றுக் கொண்டார்.

தற்போது அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கையின்போது அவரும் குடும்பத்தினரைக் கொன்று தற்கொலை செய்துகொண்டுள்ளார். இந்தப் பிராந்தியத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீண்டும் தலையெடுக்க தீவிர முயற்சி மேற்கொண்டு வந்த சூழலில் அமைப்பின் தலைவர் பலியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கடலடி எரிமலை சீற்றம்: உதவிக்காக எல்லையைத் திறந்த டொங்கா; ஓடிவந்த கொரோனா



இரண்டு ஆண்டுகளாக உலகம் கொரோனா அரக்கனிடம் பல நாடுகள் சிக்கிச் சின்னாபின்னமாகிவரும் நிலையில், பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்திருக்கும் தீவு நாடான டொங்காவில் மட்டும் இதுவரை கொரோனா பாதிப்பு இல்லாமல் இருந்துவந்தது.

அதற்கு, உலக நாடுகளிலிருந்து, தங்களைத் தாங்களே டொங்கா தனிமைப்படுத்திக்கொண்டு, நாட்டின் எல்லைகளை மூடியிருந்ததே காரணம்.

ஆனால், யார் கண் பட்டதோ, கடந்த மாதம் கடலுக்கடியில் எரிமலை வெடித்ததால் பாதிக்கப்பட்ட டொங்கா, பல்வேறு தேவைகளுக்காக எல்லைகளைத் திறக்க, சர்வதேச நாடுகள் அனுப்பிய உதவிப் பொருட்களுடன் கொரோனா தொற்றும் சென்று சேர்ந்தது.

கடலுக்கடியில் எரிமலைச் சீற்றம், அதனைத் தொடர்ந்து உண்டான ஆழிப்பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்களால், அடிப்படைத் தேவைகளான குடிநீர், மருந்துகளுக்காக அண்டைநாடுகளிடம் உதவி கோரும் நிலை ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம் நீக்கப்பட்டது.

எனினும், தற்போது கொரோனா பாதிப்பு மிகச் சிறியளவிலேயே இருக்கிறது. இது சிறிய பாதிப்புடனேயே முடிந்துவிடும் என்று அந்நாட்டு மக்கள் நம்புகிறார்கள்.

இதுகுறித்து டொங்காவைச் சேர்ந்த ஒருவர் தெரிவிக்கையில்,

''எங்களுக்கு பெரியதாக எந்த வளமும் இல்லை, எங்களது மருத்துவமனைகள் கூட மிகச் சிறியவை. ஒரு வேளை பெரியளவில் சுகாதாரப் பிரச்சினை எழுந்தால் எப்படி சமாளிப்போம் என்று தெரியவில்லை.

ஆனால், நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பாதிப்பு ஏற்படவில்லை. அதற்குள் கொரோனா தடுப்பூசி போடும் திட்டம் செயற்படுத்தப்பட்டு, ஓரளவுக்கு தடுப்பூசிகளும் போடப்பட்டுள்ளன. உலகில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டதுமே இங்கு பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுவிட்டது.

ஏராளமான பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு நாடுகளில் ஒருசில மாதங்களில் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்ட ஒரே ஒரு நாடாக டொங்கா விளங்குகிறது.

பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள பல்வேறு தீவு நாடுகளில் ஒன்று டொங்கா. அந்நாட்டில் கடலுக்கு அடியில் அமைந்துள்ள ஹங்கா டொங்கா ஹங்கா ஹாபாய் என்ற எரிமலை கடந்த மாதம் வெடித்ததில் கடலில் சுனாமி பேரலைகள் எழுந்தன. இந்தப் பேரலையால் நியூசிலாந்து, பெரு வரை கடலோரப் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டது.

டொங்காவிலும் எரிமலை சாம்பலும், உப்புநீரும் பல்வேறு பகுதிகளில் படிந்து குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. ஏராளமான மக்கள் பாதுகாப்பான பகுதிக்கு இடம்பெயர நேரிட்டது. இந்தச் சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். 50 வீடுகள் சேதமடைந்தன. 1.06 இலட்சம் மக்கள்தொகை கொண்ட அந்த நாட்டின் 80 சதவீத மக்கள் இந்த எரிமலை வெடிப்பால் பாதிக்கப்பட்டதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், டொங்காவுக்கு அவுஸ்திரேலியா, ஜப்பான், நியூசிலாந்து ஆகிய நாடுகள் அனுப்பிய உணவு, மருத்துவப் பொருட்கள், குடிநீர், தொலைத்தொடர்பு உபகரணங்கள் உள்ளிட்டவை கடந்த வாரம் சென்றடைந்தன.

அமெரிக்கா, பிரித்தானியாவிலிருந்தும் ஏராளமான உதவிப் பொருட்கள் கப்பல்கள் மூலமாக டொங்காவுக்குச் சென்றன.

சுனாமி பேரலையால் குடிநீர் ஆதாரங்களில் கடல்நீர் புகுந்ததால் டொங்காவில் குடிநீர் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆதலால், அங்கு குடிநீர் விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என செஞ்சிலுவை சங்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து, ஜப்பான், தனது இராணுவ விமானத்தில் 3 தொன் குடிநீரை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## உத்தரகாண்டில் கடும் பனிப்பொழிவு

# வாகனங்களுடன் சிக்கித் தவித்த மக்களை பத்திரமாக மீட்ட பேரிடர் மீட்புக் குழு



உத்தரகாண்ட் மாநிலத்தில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டிருக்கும் நிலையில், பல்வேறு இடங்களில் வாகனங்களுடன் சிக்கித் தவித்த மக்களை பொலிஸாரும் மாநில பேரிடர் மீட்புக் குழுவினரும் பத்திரமாக மீட்டுள்ளனர்.

மீட்புப் பணிகளை முடுக்கிவிட்ட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், சாமோலி மாவட்டத்தின் தீபவளிக்கால் பகுதியில் சிக்கித் தவித்த ஆறு பேரையும், திரிஜுகி நாராயண் கோயிலுக்கு கீழே சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவில் சிக்கியிருந்த 2 பேரையும் பத்திரமாக மீட்டு பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைத்ததாக அறிவித்துள்ளது.

இதேபோல், அல்மோரா மாவட்டத்தின் மச் கலி பகுதியில் சிக்கியிருந்தவர்கள் மீட்கப்பட்டதாகவும் பல இடங்களில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

# 'இரவின் நிழலில்' இணைந்த மூன்று ஒஸ்கார் வின்னர்கள்

'ஒத்த செருப்பு அளவு 7' என்ற வித்தியாசமான படத்தை இயக்கி பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தார் இயக்குநரும் நடிகருமான பார்த்திபன்.

படம் முழுவதும் தனி ஒருவராக நடித்த பார்த்திபனின் இப்படத்திற்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. மேலும், சென்ற ஆண்டுக்கான தேசிய விருதையும் இப்படம் தட்டிச் சென்றது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து பார்த்திபன் 'இரவின் நிழல்'' என்ற படத்தை இயக்கி நடித்து வருகிறார். இப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.




இந்நிலையில், இப்படம் குறித்த சுவாரஸ்யமான அறிவிப்பொன்று வெளியாகியுள்ளது. ஒஸ்கர் வின்னர்கள் கட்டா லங்கோ லியோன் என்பவர் விஷுவல் எபெக்ட்ஸ் மேற்பார்வையாளராகவும், கிரைக் மான் என்பவர் சவுண்ட் டிசைன் பணிக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு வெளியான வ்ஹிப்லஸ் என்ற கனடா படத்திற்காக சிறந்த சவுண்ட் டிசைனுக்கான ஒஸ்கார் விருது கிரைக் மானுக்கு வழங்கப்பட்டது. அதேபோன்று கடந்த 2016ஆம் ஆண்டு கட்டா லங்கோ லியோனுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஒஸ்கார் விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இவர்கள் இருவரும் இரவின் நிழல் படத்தில் இணைந்து பணியாற்றவுள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. அந்தவகையில் பார்த்திபனின் 'இரவின் நிழல்' படத்தில் ஏ.ஆர். ரஹ்மானுடன் சேர்த்து 3 ஒஸ்கார் விருது வின்னர்கள் இணைந்துள்ளனர்.



# உலக செய்திகள்

ஐரோப்பாவில்...

# அமெரிக்காவின் படை அதிகரிப்பு அழிவை ஏற்படுத்தும்

## ரஷ்யா எச்சரிக்கை



கிழக்கு ஐரோப்பாவுக்கு கூடுதல் படையினரை அனுப்பும் அமெரிக்காவின் நடவடிக்கை அழிவை ஏற்படுத்தக்கூடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு இணையமைச்சர் அலெக்ஸாண்டர் குருஷ்கோ தெரிவிக்கையில்,

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கூடுதலாக 3,000 அமெரிக்க வீரர்களை அனுப்பவிருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளமை அழிவை நோக்கி இட்டுச்செல்லும் நடவடிக்கையாகும்.

மேலும், அந்தப் பிராந்தியத்தில் தங்களது படைப்பலத்தை அமெரிக்கா அதிகரிப்பதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது.

கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர்களுடன் மோதலில் ஈடுபடாமல் அமைதியை நிலைநாட்டுவதாக மின்ஸ்க் ஒப்பந்தத்தில் உக்ரைன் வாக்குறுதியளித்திருந்தது.

எனினும், அந்த வாக்குறுதியை எந்தவித தடையும் இல்லாமல் மீறிவரும் உக்ரைனுக்கு அமெரிக்காவின் இந்த நடவடிக்கை மேலும் துணிச்சலை அளிக்கும். இது, போர்ப்பதற்றம் அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும் - என்றார் அவர்.

சோவியத் ஒன்றியத்தில் ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியமாக உக்ரைன் விளங்கியது. 1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் சிதறியபோது உக்ரைன் சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது.


ரஷ்யாவுக்கு மிக அருகில் அமைந்துள்ள அந்நாட்டில் கிழக்குப் பிராந்திய மக்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் மேற்குப் பகுதி மக்கள் மேற்கத்தேய நாடுகளுக்கு ஆதரவாகவும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

இந்தச் சூழலில், சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக அமைக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைந்தால் தங்கள் நாட்டுக்கு அது பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா தெரிவித்துவருகிறது. எனவே, அந்த நாட்டை தங்களுடன் எப்போதும் இணைத்துக்கொள்ளப் போவதில்லை என்று நேட்டோ அமைப்பு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்தி வருகிறது.

அதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், உக்ரைன் எல்லையில் சுமார் ஒரு இலட்சம் படையினரை ரஷ்யா குவித்துள்ளது. இதனால், எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் உக்ரைனின் கிரீமியா தீபகற்பத்தை ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டதைபோல் மீண்டும் அந்த நாட்டின் மீது படையெடுக்கும் என்று அச்சம் நிலவி வருகிறது.

உக்ரைனுக்கு ஆதரவாக கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ படையினரின் பலத்தை அதிகரிக்கும் வகையில், ஜேர்மனிக்கு 1,000 வீரர்களை ஏற்கனவே அனுப்பியுள்ளதாகவும் கூடுதலாக அந்த நாட்டுக்கும் போலந்துக்கும் வடக்கு கரோலினா மாகாணத்திலிருந்து 2,000 படை வீரர்களை அனுப்பவிருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் புதன்கிழமை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் மீது போர் தொடுத்தால் ரஷ்யா எதிர்கொள்ளும் சவால்கள்



உக்ரைன் மீது ரஷ்யா முழுமையான போரில் ஈடுபட்டால், அந்நாடு பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அரசியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சோவியத் ஒன்றியம் என்ற அமைப்பிலிருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். மொழி, கலாசார அடையாளத்தில் ஒத்துப்போவதால், உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. உக்ரைன் மக்களோ, தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர்.

நேட்டோ எனப்படும் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் கூட்டணியில் இணைய கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் விரும்புகிறது. இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஆனால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், இந்த இணைப்பிற்கு ஆதரவளித்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகள் பக்கம் உக்ரைன் சாய்வது, தனக்கு ஆபத்தாகிவிடும் என ரஷ்யா அஞ்சுகிறது.

இதையடுத்து, ரஷ்யா - உக்ரைன் எல்லையில் தன் படைகளை ரஷ்யா குவித்துள்ளது. எந்நேரத்திலும், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்கலாம் என்பதால், ஐரோப்பிய கண்டத்தில் பெரும் பதற்றம் நிலவுகிறது. ரஷ்யாவில் இயற்கை எரிவாயு, மசகு எண்ணெய் கிடைப்பது, அரசுக்குப் பொருளாதார வளத்தைத் தந்திருக்கிறது. சோவியத் கால இராணுவ பலம் அப்படியே குறையாமல் இருக்கிறது. இவற்றைக் கொண்டு தானும் ஒரு வல்லரசு தான் என நிரூபிக்க ரஷ்ய ஜனாதிபதி புட்டின் விரும்புகிறார்.

ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் பொதுவான எண்ணமாக அமெரிக்க எதிர்ப்புணர்வு இருப்பதால், இரண்டும் இணைந்து செயற்படுகின்றன. நெருக்கடி என்றால் சீனா, ரஷ்யாவுக்கு துணையாக நிற்கும் என ஜனாதிபதி புட்டின் நம்புகிறார். கொரோனா பரவலால் ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார சரிவு ஏற்பட்டுள்ளது. இதை பயன்படுத்தி, ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்த, உக்ரைன் மீது போர் தொடுக்கும் நடவடிக்கையை ரஷ்யா எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.


உக்ரைன் மீது ரஷ்யா முழுமையாக போர் தொடுத்தால், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை சந்திக்க நேரிடும்; ஐ.நா. சபையும், பொருளாதாரத் தடைகளை விதிக்கலாம். இந்தியா உட்பட பல நாடுகளின் நட்புறவிலும் பாதிப்பு ஏற்படும். ரஷ்யாவிடம் மட்டுமல்ல, உக்ரைனிடமும் அணு ஆயுதங்கள் உள்ளன. போர் ஏற்பட்டால், ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் அணு ஆயுதங்களை பயன்படுத்தும் ஆபத்துள்ளது. அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால், ரஷ்யாவின் இயற்கை வளம், எண்ணெய் வளம் நிச்சயம் பாதிப்புக்குள்ளாகும்.

ரஷ்யாவில் முன்பிருந்த பொருளாதார வளர்ச்சி தற்போது இல்லை. நாட்டில் வேலையில்லா திண்டாட்டமும் அதிகரித்துள்ளது. போர் நடந்தால், ரஷ்யா பெரும் அழிவை சந்திக்கும் பேராபத்து உள்ளது. அதனால், இந்த விவகாரத்தில் புட்டின் அவசரப்படமாட்டார்; பூச்சாண்டிதான் காட்டுவார் என அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

நேரடி போரை தவிர்க்கும் வகையில், உக்ரைனின் கம்ப்யூட்டர் தொழில் நுட்பங்களில் சைபர் தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன. அடுத்துவரும் நாட்கள், பெரும் பரபரப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## சர்வதேச விண்வெளி மையத்தை பசுபிக் கடலில் மூழ்கடிக்க நாசா திட்டம்



சர்வதேச விண்வெளி மையத்தை 2031ஆம் ஆண்டு பசுபிக் பெருங்கடலில் மூழ்கடிக்க நாசா திட்டமிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த விண்வெளி ஆய்வகம், பூமியிலிருந்து 227 கடல் மைல் தொலைவில் சுற்றி வருகின்றது. இந்நிலையில், அதன் ஆயுட் காலம் முடிவடைந்ததும் விண்வெளி மையத்தை பசுபிக் கடலில் மூழ்கடிக்க நாசா திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 2030ஆம் ஆண்டுமுதல் இதற்கான பணிகள் தொடங்கும் என்று தெரிவித்துள்ள நாசா அதிகாரிகள், தெற்கு பசுபிக் பெருங்கடலில் மக்கள் வசிக்காத பகுதியான பொயிண்ட் நெமோ என்று அழைக்கப்படும் பகுதியில் சர்வதேச விண்வெளி மையத்தை விழவைப்பதே திட்டம் என்று தெரிவித்துள்ளனர்.

# ஆசியன் மாநாட்டில் மியன்மார் புறக்கணிப்பு

கம்போடியாவில் நடைபெறவிருக்கும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியன்) மாநாட்டில் பங்கேற்க மியன்மாருக்கு அழைப்பு விடுக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மார் தேர்தலில் முறைகேடு நடைபெற்றாதக் கூறி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கடந்த ஆண்டு அகற்றியது. இதனை எதிர்த்து போராட்டம் நடத்திய 1,500இற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதற்கு சர்வதேச நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் சூழலில், எதிர்வரும் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஆசியன் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மியன்மார் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் வெடித்து சிதறியது எண்ணெய்க் கப்பல்

## 10 ஊழியர்கள் நிலைமை என்ன?



நைஜீரியாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எண்ணெய்க் கப்பலொன்று திடீரென வெடித்துச் சிதறியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவின் தென்மேற்கிலுள்ள நைஜர் டெல்டா பகுதியில் எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ளன. இந்தப் பகுதியில் ஷேபா ஆய்வு மற்றும் உற்பத்தி நிறுவனத்திற்கு சொந்தமான மிதக்கும் எண்ணெய் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்கும் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது.

2 மில்லியன் பீப்பாய்கள் வரை எண்ணெய் சேமித்து வைக்கும் திறன்கொண்ட அந்த டிரினிட்டி ஸ்பிரிட் என்ற கப்பல் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) காலையில் திடீரென வெடித்துச் சிதறியது. இதனால் கப்பல் தீப்பிடித்து, கரும்புகை வெளியேறியது. கப்பலிலிருந்த ஊழியர்களின் நிலை என்னவானது என்பது தெரியவில்லை. உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்து ஏற்பட்டபோது 10 ஊழியர்கள் கப்பலில் இருந்ததாக ஷேபா நிறுவன தலைமைச் செயல் அதிகாரி தெரிவித்துள்ளார். தீயை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விபத்துக்கான காரணம் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. கப்பல் தீப்பிடித்து எரியும் காட்சி மற்றும் அதிலிருந்து கரும்புகை எழுந்ததை கரையிலிருந்த ஊழியர்கள் மற்றும் மீனவர்கள் பீதியுடன் பார்ப்பதுபோன்ற வீடியோக்கள் வெளியாகியுள்ளன.



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செல்லப் பிராணிகள் மீது மிகுந்த ஆர்வம்கொண்டவர். அதன் பொருட்டு வெள்ளை மாளிகைக்கு புதிய பூனை ஒன்றை வரவு செய்திருக்கிறார்.

இதன்படி வில்லோ என்ற இரண்டு வயதான பூனை புது விருந்தாளியாக வெள்ளை மாளிகைக்கு வந்துள்ளது.

# ஸ்பெயினில் படகு விபத்து: 16 பேர் மாயம்; 41 பேர் மீட்பு



ஸ்பெயினில் கனேரி தீவு கடற்பகுதியில் படகொன்று கவிழ்ந்த விபத்தில் 16 பேர் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக ஸ்பெயினுள் நுழைய 58 பேர் வந்த படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இது குறித்து தகவலறிந்து வந்த கடலோர காவல் படையினர் 41 பேர் மற்றும் உயிரிழந்த ஒருவரின் உடலை மீட்டுள்ளனர்.

படகு நெரிசல்களுக்கு மத்தியில் பயணம் செய்ததால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் காணாமல்போன 16 அகதிகளை தேடும் பணி நடந்துவருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7